# எறும்பு

இரு மாத இதழ்

எத்தனம் : 01
சுமை : 05



சின்னப்பிஞ்சே!
சிங்களம் சிக்கலாக்கிவிட்ட - உன்
வாழ்வின் சுமையை
விற்க நினைக்கிறாயோ!
என்னம்மா.....
அதன் குறியீடா - உன்
தலை மேல் இடியப்பம்.

ஜூலை -
ஓகஸ்ட்
1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை: ரூபா 25.00

சொல்பவர்கள் எல்லோரும்

# "சுவர்ணா"

என்றே சொல்கிறார்கள்

எதற்குத்தெரியுமா?

அழகிய, தரமான நம்பிக்கையுள்ள

நகைமாடத்திற்கு; உங்களுக்கு மட்டும்

வேண்டாமா சுவர்ணா!!!

மல்லாவியில்

வன்னி மண்ணில் O/L, A/L மாணவர் நலன் கருதி

யாழ்நகர்

# எடிசன் அக்கடமி

O/L கணித விஞ்ஞான வகுப்புக்கள்

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

கணிதம் - R. ஜெகன் (யாழ் பிரபல ஆசிரியர்)
T. நித்தியானந்தம் (தென்மராட்சி முன்னணி ஆசிரியர்)
K. பத்மநாதன் (வன்னியின் முன்னணி ஆசிரியர்)

விஞ்ஞானம் – M. கஜன் (யாழ் பிரபல ஆசிரியர்)
J.J. கொலின்ஸ் (யாழ் பிரபல ஆசிரியர்)

A/L கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புக்கள் எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது.

– நிர்வாகி –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்பு

## மீசையில் மண்பட்டது ஆனால் விழவில்லையாம்

அடியைக் கொடுத்து பொல்தூக்க வைத்த சிங்கள அரசு, பின் அடி வாங்கிப் பொல்லைக் கொடுத்து, இப்போது பொல்லைக் கொடுத்தால் அடி வாங்குகின்றது. நாளை? இது விடுகதையல்ல விடுதலைப் புலிகள் உருவான கதை. விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கதை இது.

இலங்கையின் ஆட்சி அதிகாரம் சிங்களத்தின் கைகளிற்குச் சென்றது அவர்களுக்கு அதிஸ்ரவசமானது. இது ஆங்கிலேயரால் உண்டானது. அந்த அதிஸ்ரத்தின் அனுகூலத்தோடு சிங்களம் தனது ஆசைகளை அரங்கேற்ற எண்ணியது.

தமிழர்களை அடக்கி, அடிமைகொண்டு, அனாதரவாக்கி அவரகம் நிலத்திணைச் சிங்களத்தின் ஏகபோக உரிமையாக்கி இலங்கை சிங்களவரின் நாடு எனும் நிலையை அடைவதே அவர்களின் இலக்காக இருந்தது. அதற்காக நடந்த அடக்கு முறைகளும், உரிமை மறுப்புக்களும், இனஅழிப்புகளும் பழைய கதை. ஆனால் அதுவே தமிழரை ஆயுதம் தூக்கவேண்டியதன் அவசியத்தை ஆழமாக உணர்த்தியதோடு ஆயுதத்தின்பால் நம்பிக்கை கொளளவும் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான நம்பிக்கையின் பரிணாமமே ஆயுதப் போராட்டமாக வலுப்பெற்று விடுதலைப்புலிகளாக விஸ்தீரணம் கண்டது.

தமிழரின் பாதுகாப்பிற்கு, அவர்களின் இருப்பிற்கு ஆயுதத்தால் அரண் செய்யத் துணிந்த புலிகள், எதிரியிடமிருந்தே ஆயுதத்தை அடித்துப் பறித்துத் தம் பலத்தை வளர்த்துக் கொள்ளும் தந்திரத்தைக்கைக்கொண்டனர். இதனை விடுதலைப் புலிகளின் தலைவர் செம்மையாக நடைமுறைப்படுத்தி இருந்தார்.

இன்றோ, எடுத்த ஆயுதங்களைக் கொண்டு எதிரியைக் கொன்று பெரும் படைக்கல சக்தியை புலிகள் பெற்றுக் கொள்ளும் போர் வியூகத்தை தேசியத் தலைவர் நடைமுறைப் படுத்துவது புலிகள் நடாத்திய சமர்களில் தெளிவாகத் தெரியும் ஒன்று.

இதற்கு இன்றைய அரசு "ஜெயசிக்குறு" - வெற்றி உறுதி- என்று பெயரிட்டு நல்ல கடை விரித்துக் கொடுத்திருக்கிறது என்றே தெரிகிறது.

முல்லையில் கொடுத்த ஆட்லறியால் அடிவாங்கி, தாண்டிக் குளம் பெரிய மடுவில் புலிகள் புகுந்து செய்த சமரால் பெரும் படைக்கல சக்தியை இழந்ததோடு, போர் வீரர்களையும் இழந்து படையை வ்ட்டு ஓடியவர்களைத் தேடிப்பிடிக்கும் நிலைக்கும் உள்ளாக்கி இருக்கிறது "ஜெயசிக்குறு".

இது போதாதென்று "இன்ரபோலின்" உதவியை ஓடிய படைகளைத் தேடிப் பிடிக்க நாடி இருக்கிறது அரசு. இந் நிலையிலும் போலி வீறாப்போடு "ஜெயசிக்குறு" தொடரு மென்று அடுத்தடுத்து அரசின் அறிவிப்புகள் வேறு.

தமிழரின் விடுதலை போராட்ட வரலாற்றில் விரியும் இந்தப் போர்க்களத்தில் விடுதலைப் புலிகள் சாதிக்கும் இன்னுமொரு கட்டம் எச்சமாயுள்ளது. அது "அரசின் இராணுவம் அடி வாங்காமல் பொல்லைக் கொடுப்பது" விரைவில் அது நடக்கு மென்றே நம்புவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை

தமிழ் மாணவர் ஒன்றியம்,
தமிழீழம்,
06. 06. 1997.

**அன்பார்ந்த தமிழீழ மாணவச் சகோதரர்களே!**

இன்று தமிழீழ மாணவர் எழுச்சி நாள். தமிழீழ மாணவர்களின் எழுச்சியின் அவசியத்தையும் கட்டாயத்தையும் புரிந்து கொள்ளத் தூண்டும் ஒரு புரட்சிகர நாள். உலகில் மாணவ உலகம் தாம் அடைய வேண்டிய இலக்குகளை வரித்துக் கொள்வதோடு கடந்த காலத்தில் கண்ட வெற்றிகளையும் தோல்விகளையும் அதற்கான காரணங்களையும் கருத்கில் எடுத்துக் கொண்டு எதிர்கால இலக்கிற்கு தடையாய் இருக்கின்ற, இருககப் போகின்ற விடயங்களை ஆய்ந்து அதற்கான தீர்வுகளோடு முன் செல்கின்றது. இந்த நேரத்தில் 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கப் போகும் தமிழீழ மாண..ச் சமூகத்தின் கல்வியின் இலக்கு முதன்மை பெற முடியாமல் எம் வாழ்வியல் பிரச்சினை குறுககாக நிற்பது துயரமானது. எமது கல்வியின் இலக்குகளை இருள் மயமாக்கி எம் வாழ்வியல் இருப்பு நிலையை கேள்விக்குறியாக்கியிருக்கிறது சிங்கள அரசு, இதற்கான தீர்வைக் காண முடியாமல் குறுக்கறுத்து நிற்கும் இவ் வாழ்வியல் முட்டுக்கட்டைகளை உடைத்தெறியாமல் தமிழீழ மாணவர் சமூகம் ஆரோக்கியமான இலக்குகளை எட்டமுடியாதென்பது கண்கூடு.

சிங்கள பௌத்த இனவாத அரசு தமிழ் மக்கள் மீது காட்டிய பாகுபாடும் இனத்துவேசமும் தமிழ் மாணவர் சமூகததை நேரடியாகத் தாக்கிய காலகட்டத்தில் தான் ஆயுதப் போராட்டம் பிறப்பெடுத்தது. அன்றைய மாணவர்களே இதை முன்னெடுத்தார்கள். இன்று அது வளர்ந்து, விரிந்து, வியாபித்து இருக்கும் தமிழர்களின் பெரும் விடுதலை அமைப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் வளர்ச்சி கண்டுள்ளது. இவ் வளர்ச்சியில் மாணவர் சமூகத்தின் பங்கு புறக்கணிக்கப்பட முடியாத அளவிற்கு பெரும் இடத்தை வகித்து வருகின்றது. இந்தப் போராட்டத்தின் வளர்ச்சி மறு முனையில் அரசை தமிழர்கள் பால் ஆக்கிரமிப்பு ஆவேசத்தையும் அடாவடித்தனங்களையும், அப்பட்டமான மனித உரிமை மீறல்களையும், ஈவிரக்கமற்ற இனப்படுகொலைகளையும் தமிழர்கள் பால் அவலத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைப்பதில் ஆனந்தமடையும் தன்மையையும் வெளிப்படுத்தத் துணிய வைத்துள்ளது. இதற்கு சர்வதேசத்தின் முன் நின்று நியாயம் கற்பிக்கவும் அரசு முனைவது விசமத்தனமானது.

சிங்கள தேசத்தில் வருடாந்தம் ஒதுக்கப்படும் ஆயிரக்கணக்கான மில்லியன் ரூபாய்களால் புதிது புதிதாக பாடசாலை வளாகங்களில் கட்டடங்கள் உயருகின்றன. ஆனால், எங்கள் தேசத்திலோ பாதுகாப்பு நிதிக்காக ஒதுக்கப்படும் கோடிக் கணக்கான ரூபாய்களால் எங்கள் பாடசாலைகள் தரைமட்டமாக்கப்படுகின்றன. சிங்கள மாணவர்களிற்கு நூற்றுக்கணக்கான மில்லியன் ரூபாய்களை சீருடைகளுக்காக ஒதுக்கும் அரசு எமக்கு நூறு ரூபாய்களுக்கு வெண்கட்டிகளைத் தானும் அனுப்ப மறுக்கிறது. சிங்கள தேசத்துப் பாடசாலைகள் கணனிகளாலும் விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான கருவிகளாலும், தொழிற்துறை கல்விகளுக்கான நவீன கருவிகளாலும் நிரப்புகின்ற அதே வேளை எங்கள் பாடசாலைகளை இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் இடம் பெயரச் செய்த மக்களைக் கொண்டு நிரப்ப வைத்துள்ளது அரசு. இது போன்ற பலதரப்பட்ட பாகுபாடுகளாலும், அழுத்தங்களாலும் உயிர் மீதான அச்சுறுத்தலினாலும் எம்மைத் துன்புறுத்தி நசுக்கி விட அரசு எண்ணிவருகிறது. ஆயினும் எம் ஆசிரியர்களின் அயராத உழைப்பினாலும் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு, கல்விக் கழகம், சமூக மேம்பாட்டுப் பிரிவு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தந்த உதவிகளாலும் ஊக்குவிப்பாலும் எமது மாணவ சமூகம் திடகாத்திரமான நம்பிக்கையோடு அரசின் தடைகளை உடைத்து தமது கல்வியின் தரத்தை கலைநாட்டி வருவது பெருமைக்குரியது. ஆனால் இத்தனை துயரங்களுக்கூடாக எமது கல்வியின் தரத்தை நிலைநாட்டிய மாணவர்நிளை தமது ஆக்கிரமிப்பை சர்வதேசத்தின் முன் நியாயப்படுத்துவதற்காக ''சமாதான யாத்திரை'' என்று அழைத்துச் சென்று இழிவான முறையில் விளம்பரம் தேடியது வேதனைக்குரியது.

இன்று வன்னிப் பெருநிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் நோக்கோடு தமது துருப்புக்களை முடுக்கிவிட்டுள்ளது சிங்கள அரசு. எமது வாழ்வியல் இருப்பின் உத்தரவாதமின்மையை, எமது உயிர்மீதான அச்சுறுத்தலை, இது மேலும் வலுவடையச் செய்திருக்கிறது. இந்நிலையில் அரசின் இச் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கும் அதே வேளை எமது வாழ்வியல் இருப்பின் நிலையான தன்மையை உறுதி செய்வதும் கல்வி மேம்பாட்டைக் காத்துக் கொள்வதும் இன்றைய கால கட்டத்தில் மாணவ சமூகத்தின் புறக்கணிக்கப்பட முடியாத கட்டாய கடமைகளாகும். இதைக் கருத்தில் கொண்டு தமிழீழ மாணவ சமூகம் அயராது உழைக்க வேண்டுமென இவ் எழுச்சி நாளில் உறுதியெடுத்துக் கொள்வோம்.

நன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் தரிசனம்

இந்த நூற்றாண்டு நிறைவு நெருங்கிக் கொண்டிருக்கிறது. 1998, 1999 என இரு ஆண்டுகளில் புதிய நூற்றாண்டு ஆரம்பமாகவுள்ளது.

இன்றையஉச்ச அறிவியல் சாதனைமான கணனி 2000 ஆண்டில் ஒரு கஷ்டத்துக்குள்ளாகப்போகின்றது. பெரிதாக ஒன்றுமில்லை. கணனிகள் அனைத்திலும் திகதி பதிவில் ஆண்டு 2 இலக்கங்களில் மட்டும் பதியப்படும். 1997 என்றால் 97 என்றும் 1998 என்றால் 98 என்றும் கணனியில் பதிவுகள் இடம் பெறுகின்றன. சரி 2000 ஆண்டை கணனி எப்படிப் பதியப் போகிறது. வெறுமனே இரண்டு சைபர்களாகத்தான். அதாவது இப்படி 00, 2001 என்றால் 01, 2002 என்றால் 02... இப்படியாக 2099 வரை போகும். பிறகு 3000 என்றால் பழையபடி 00 தான். பாவம் கணனி வைத்திருப்போர் இன்னும் 2 வருடங்களில் அவதிப்படப் போகின்றனர். எம்மிடம் கணனி இல்லாததால் எமக்கு பிரச்சினை இல்லை என்கிறீர்களா. சரி மனிதனின் அறிவு வளர்ச்சியில் கணனியில் ஏதாவது மாற்றம் செய்து விடமாட்டானா என்ன?

இந்த நூற்றாண்டு முடியப் போகிறது. இந்த நூற்றாண்டில் மனிதன் எதைத்தான் சாதித்து விட்டான். இந்தநூற்றாண்டை நாம் அறிவியல் நூற்றாண்டு என்றே கூற வேண்டும். போர்கள் மலிந்திருந்தாலும் அறிவியலில் மனிதன் உச்சத்திற்கு வந்துள்ளதும் முக்கிய புதிய கண்டுபிடிப்புக்கள் ஏராளமாக நிகழ்ந்துள்ளது. இந்த நூற்றாண்டில் தான் நவீன விமானங்கள் உருவானதும் இன்று அது சுப்பர் சொனிக் வரை வளர்ந்து நிற்பதும் இந்த நூற்றாண்டில் தான்.

சினிமா விருத்தி கண்டது– தொலைக்காட்சி – வானொலி மக்கள் மயமானதும் – வீடியோ மலர்வும் மருத்துவ விருத்திகளும் இந்த நூற்றாண்டின் பிள்ளைகளே.

ஒரு போராயுதமாக இருந்த றொக்கட் – எட்டப்பட முடியாத விண் வெளியை முட்டிக் கிழிக்கும் ஏவாயுதமாக மாறியது. 1957 இல் முதல் செய்மதி அன்று விண்ணுக்குச் செல்ல 12 வருடங்களில் மனிதன் சந்திரனில் கால் நாட்டினான். இன்று 40 வருடங்களில் விண்வெளி தொழில் நுட்பம் எப்படி வளர்ந்துள்ளது என்பதை நாம் தவிர்ந்த உலகம் அனுபவிக்கின்றது. 50 களில் பரிணமித்த கணனி இன்று உலகம் முழுவதும் மலிந்த ஒன்றாகி விட்டது.

இப்படி நூற்றாண்டு அறிவியல் மறுமலர்ச்சி நிறைந்ததாக இருக்

கிறது. நாம் பயன்படுத்தும் அறிவியல் இன்று நேற்றல்ல பல நூற்றாண்டுகளில் பல கோடி மனிதர்களின் உழைப்பால் உருவானதென்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நூற்றாண்டு நிறைவுக்குச் செல்கின்றது நாம் எங்கு செல்கிறோம் சகலரும் சிந்தியுங்கள். சிந்தித்தால் சிறீலங்கா அரசு மீது நாம் அடங்காக் கோபம் கொள்ள வேண்டி வரும்.

அறிவியல் தரிசனத்தில் உங்கள் அறிவியல் சந்தேகங்களையும் பகிர்ந்து கொள்ளலாம். தொடர்புகளை ஏற்படுத்துங்கள், தொடர்புகள் என்றதும் இன்ரநெற் என்ற நவீன கணனி தொடர்பூடகம் மூலம் உலகம் சுருக்கப்பட்டு விட்டதையும் இங்கு தெரியப்படுத்துகிறேன்.

தி. தவபாலன்


உங்கள் மங்களகரமான நிகழ்வுகளை
முற்றிலும் புதிய முறையில் பதிவு செய்கிறது.
யாழ்

# மலரும் மலர்கள்

வீடியோ அன் போட்டோ

வாழ்வில் ஒரு முறையே வரும் மங்களகரமான நிகழ்வுகளை நீங்கள் என்றென்றும் கண்டுகளிக்க முடியும்!!

மலரும் மலர்கள் (வீடியோ அன் போட்டோ)
துணுக்காய்வீதி, மல்லாவி.
(மத்திய கல்லூரி முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கொங்கொங்கில் ஆடுகள் நனைகின்றனவாம்'......

கடந்த சில வாரங்களாக ஏன் மாதங்களாகவே கொங்கொங் சீனாவோடு மீண்டும் இணைவது குறித்து மேற்குலகம் பட்ட கவலை, தெரிவித்த ஐயங்கள், ஆதங்கங்கள் குறித்து அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை. ஏகாதிபத்தியர்கள் கலைத்தாலும் ஏகாதிபத்தியக்கனவுகள் இன்னமும் கலையவில்லை. சனநாயகம், மனித உரிமைகள் என்பன எவரினதும் உள்நோக்கங்களை மறைக்கும் திரைகளாகிவிட்டன இன்று.

சென்ற யூன் மாதம் 30ம் திகதி வரலாற்றில் ஏதோ பெரும் அதிசயமொன்று நடந்தேறியது போலவும் கொங்கொங்கை சீனாவிடம் ஒப்படைத்த பிரித்தானியா பெருந்தன்மையுடன் நடந்து கொண்டது போலவும் அதனது சனநாயகத்தின் பாற் பட்ட கரிசனை கண்ணியமானது போலவும் மேற்குலகின் அச்சு, மின்னியல் ஊடகங்கள் மிகைப் படுத்தப்பட்ட வடிவங்களில் செய்திகளை வெளியிட்டன; பற்பல ஐயங்களை எழுப்பின. கொங்கொங் வாழ் 60 இலட்சம் மக்களின் எதிர்காலம் இனி என்ன வாகுமோ? காலத்திற்கு காலம் சீனப் புரட்சி ஏற்பட்ட 1949ம் ஆண்டிலிருந்து, மாணவர் கிளர்ச்சி அடக்கப்பட்ட 1989 வரை சீனப் பெரு நிலப் பரப்பிலிருந்து வெளியேறி கொங்கொங் சேர்ந்தோர் மீது மக்கள் சீனக் குடியரசு பழி வாங்கும் போக்கில் நடந்து கொள்ளுமா? கொங்கொங்கின் தனித்தன்மையை பாதுகாப்பதாக சீனா கொடுத்த வாக்குறுதிகள் காப்பாற்றப்படுமா? தன் பொருண்மிய மேம்பாடு இனி தாழ்ச்சி அடையுமா? இவ்வாறாக, பலப்பல ஐயங்கள். அதே வேளை மாட்டின் லீ என்கிற கொங்கொங்கின் சனநாயகக் கட்சியின் தலைவர் என்ன கூறினார் என்று பாருங்கள். "கொங்கொங்கை சீனாவிடம் ஒப்படைப்பது என்பது, இரண்டாம் உலகப்போர் முடிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைந்த பின்னர் 55 இலட்சம் யூதரை ஜேர்மனியிடம் ஒப்படைத்தற்கு சமம்'' என்றார் மாட்டின் லீ.

இவ்வாறாக, ஐயங்கள் ஏன் கிளப்பப்படுகின்றன? எது உண்மை? விடை காண நாம் 1½ நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலகட்டத்திற்குப் பயணிக்க வேண்டும். 156 ஆண்டுகளுக்கு முன் 1841ம் ஆண்டு ஏன் கொங்கொங் ஆங்கிலேயரிடம் அகப்பட்டது என்பதை அறிய வேண்டும். அப்போது பெரும் ஏகாதிபத்தியமொன்று போதைப்பொருள் வணிகமொன்றில் எவ்விதம் ஈடுபட்டது என்கிற அதிர்ச்சியூட்டும் உண்மை வெளிவரும். 19ம் நூற்றாண்டிலே பலவீனம் அடைந்திருந்த சீனப் பேரரசை தமது இழுதத இழுப்பிற்கெல்லாம் உட்படுத்தி அதனிமிருந்து வணிக உரிமைகளையும் பிரத்தசங்களையும் தந்திரமான உடன்பாடுகள் மூலம் ஆங்கிலேயர் தம் வசமாக்கிய காலகட்டமது. 19ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே சீனாவோடான ஆங்கிலேயரின் வணிகம் பெருவளர்ச்சி கண்டது. ஆனால் அது சீனாவிற்கே சாதகமாகவிருந்தது. ஆங்கிலேயரின் தேநீர் மீதான தணியாத தாக்கத்தால் பெருமளவு தேயிலை சீனாவிலிருந்து ஏற்றுமதியானது. கப்பல்களில் தேயிலையை அனுப்பி அதே கப்பல்களில் வெள்ளிப்பணத்தைச் சீனா அள்ளியது, எனச் சொல்லுமளவிற்கு அதன் வருவாய் அதிகரித்தது. இது ஆங்கிலேயருக்கு உவப்பான விடயமல்ல. என்ன தான் முயன்றாலும் ஆங்கிலேயரின் கம்பளி போன்ற பொருட்களை சீனாவில் பெருமளவில் விற்க முடியவில்லை. தேயிலை இறக்குமதிக்கு செலவழித்த பணத்தின் ஆறிலொரு பங்கைத்தன்னும் ஆங்கிலேயரால் தமது விற்பனை மூலம் பெற முடியவில்லை என்று கூறப்பட்டது.

இந் நிலையில் தான் நாசகாரத் திட்டமொன்றை பிரித்தானியா வகுத்தது. 8ம் நூற்றாண்டளவில் சீனருக்கு அரேபியர், துருக்கியர் போன்றோரால் அறிமுகப் படுத்தப்பட்ட அபின் போதைப் பொருள் அப்போது சீனாவில் மருத்துவப் பயன்பாட்டிலே இருந்தது. சீனருக்குப் போதைப் பொருள் பாவனையை ஏற்படுத்த இந்தியாவில் விளைந்த அபினை தனது கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் முகதாவில் தனியார் வணிகர் மூலம் சீனாவில் விற்பனைக்கு விட்டது. இதன் விளைவு பெருமளவு இலாபத்தை ஆங்கிலேயர் பெற சீனரோ போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப் பட்டனர். 1835ம் ஆண்டளவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 இலட்சம் சீனருக்கு மேற்பட்டோர் இவ்வாறாக போதைப் புகைப்பாவனைக்கு இலக்காகினர் எனத் தெரிவிக்கப்பட்டது. அதே வேளை 1821 – 1840 இடையில் 100 மில்லியன் வெள்ளி டொலர்கள் நாட்டிலிருந்து வெளியேறியது. சீன அரசின் பத்திலாறு பங்கு வருமானம் இவ்வாறாக இழக்கப்பட்டது.

சீனச் சமூகத்தின் உயர்நிலை மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை போதைப்பாவனை ஏற்படுத்திய சீரழிவு சீன அரசை இவ் விற்பனைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தூண்டியது. ஆனால் இப் போதைப் பொருள் விற்பனையை பாதுகாக்க தனது படையை ஆங்கிலேயர் சாம்பிராச்சியம் பயன்படுத்தவே 1840 முதலாம் அபினிப்போர் (First Opiumwar) ஆரம்பமானது. ஆங்கிலேயரின் தரைப்படை, கடற்படைக்கு எதிராகத் தாக்குப் பிடிக்க முடியாத நிலையிலே சீனா கொங்கொங்கை இழந்தது. எதையுமே சட்டரீதியாக செய்வதில் வல்லவர்களான ஆங்கிலேயர் கொங்கொங்கைப் பறிப்பதற்கும் 1842ம் ஆண்டு நான்கிங் உடன்பாடு என ஒன்றையும் செய்து கொண்டனர். 1856 – 1860 இடையில் நடைபெற்ற 2ம் அபினிப் போரின் விளைவும் மேலும் சில தீவுகளை கொங்கொங்கை அண்டி சீனா இழக்கவே வழிவகுத்தது. 1898ம் ஆண்டு ஏற்பட்ட உடன்

## எங்கும் எதிலும் கல்வி

வகுப்பு நடத்திக் கொண்டிருந்த பேராசிரியர் ஒருவர் மாணவர்களைப் பார்த்து "நாம் பார்க்கும் பொருள்களில் இருந்தெல்லாம் ஏதேனும் ஒரு பாடத்தைப் பெறலாம்." என்றார்.

"ரயில் வண்டியிலிருந்து நாம் என்ன பாடம் கற்றுக்கொள்ள முடியும்?" என்றான் ஒரு மாணவன்.

"காலதாமதம் செய்தால் நினைத்ததை அடைய முடியாது" என்றார் பேராசிரியர்.

"தந்தியிலிருந்து" என்றான் அடுத்த மாணவன்.

"ஒவ்வொரு சொல்லுக்கும் மதிப்புண்டு என்பதை" என்றார் பேராசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடொன்றின்படி இப் பிரதேசங்களை 99 வருட குத்தகைக்கு ஆங்கிலேயருக்கு விடுவதற்கு சீனா உடன்பட்டது. இவ்வாறாக சீனாவிற்கு வாயிலாகப் பயன்படும் பகுதியொன்றை அதன் வளங்களைப் பயன்படுத்தி தன் வணிகத்தை மேம்படுத்த எவ்விதத்தார் மீக நெறிகளுமற்ற போர்கள் மூலமாகவும் தந்திரமான உடன்பாடுகள் மூலமும் ஆங்கிலேயர் பெற்றுக்கொண்டனர். எனவே, இப்போது சீனாவிடம் கொங்கொங் ஒப்படைக்கப்படுவது வரலாற்றுத் தவறொன்று காலம் தாழ்த்தியாவது திருத்தப்படுகின்றது என்றல்லவா உலகம் மகிழ வேண்டும்?

அன்றிலிருந்து இன்று வரை சீனா தனக்கு ஏற்பட்ட அநீதியை மறக்காத போதும் கொங்கொங் தொடர்பாக மிக அவதானமான, விவேகமான அணுகுமுறையொன்றையே அது கடைப்பிடித்து வருவது கவனிக்கத்தக்கது. இன்று சீனாவிலே குறிப்பாக மாணவருக்கு கொங்கொங் தொடர்பான வரலாறு பற்றிய விழிப்புணர்வுப் பரப்புரை பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படுகின்றது. பாரிய செலவில் தயாரிக்கப்பட்ட அபினிப் போர் என்கிற திரைப்படம் ஆங்கிலேயரின் அட்டூழியங்கள் அடக்குமுறைகளை அம்பலப்படுத்த பற்பல காட்டூன்கள் ஆங்கிலேயரின் செயற்பாடுகளை கிண்டல் செய்து உண்மை நிலைமைகளை விளக்குகின்றன. விசேட நூல்கள் வெளியிடப்பட்டு மாணவருக்கு தேசிய உணர்வை ஊட்டும் வகையிலும் இங்கிலாந்து சீனாவிற்கு விளைவித்த பேரழிவுகள் பற்றியும் போதிக்கப்படுகின்றன. அதேவேளை தனக்குள்ளே முரண்பட்டுக் கொண்டிருந்த சீனச் சமூகம் அந்நிய ஏகாதிபத்தியமொன்றிற்கு எதிராக அணிதிரண்ட வரலாறும் அபினிப் போர் மூலமாகத் தெளிவாக்கப்படுகின்றது.

இவை ஒரு பக்கச் செயற்பாடுகள். மறுபக்கமோ மிகவும் வித்தியாசமானது. கொங்கொங்கின் பொருண்மிய மேம்பாட்டை குலைக்கும் வகையில் சீனா இன்று வரை நடந்து கொள்ளாமை கவனிக்க வேண்டியது. சீனப் புரட்சியின் போது கூட கொங்கொங் நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. பொதுவில் மேற்குலகால் குறிப்பாக பிரித்தானியாவாலுமே கொங்கொங் உலகின் தலைசிறந்த வணிக மையமாக வளர்க்கப்பட்டது. எனத்தோற்றம் காட்டப்படுகின்றது. ஆனால் உண்மை என்ன? சீனாவிற்கு அருகில் அதன் கட்டற்ற வளங்களை, பாரிய சந்தை வாய்ப்புக்களை உலகம் பயன்படுத்தத்தக்க வகையில் கொங்

கொங்கின் அமைவிடம் அமைந்திருந்ததே அதன் மேம்பாட்டிற்கான அடிப்படைக் காரணியாகும். அத்தோடு கொங்கொங்கின் அடிப்படைத் தேவைகளான உணவு, குடிநீர், ஏன் கட்டடம் கட்ட மணல் கூட சீனாவிலிருந்தே செல்கின்றன.

இவை மட்டுமன்றி சீனக் குடியரசு பெருமளவு கொங் கொங்கில் முதலிட்டுள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டியது. சீனாவின் 151 வங்கிகள், 33 நிதி நிறுவனங்கள் கொங்கொங்கில் இயங்குகின்றன. வணிக தொலைக்காட்சி நிறுவனங்கள் உட்பட்ட 4000க்குமேற்பட்ட நிறுவனங்களில் மக்கள் சீனக்குடியரசுக்கு பங்குகள் உண்டு. எனவே கொங்கொங்கின் வளர்ச்சித் தொடர்பில் சீனா தனிப்பட்ட கவனம் செலுத்தி வருகின்றது. அதனது நவீன தொழினுட்ப அறிவைப் பயன்படுத்த சீனா விரும்புவதாக கூறப்படுகின்றது.எனவே 1984இல் செய்யப்பட்ட உடன்பாட்டின் படி அடுத்த 50 வருடங்கட்கு அதன் முதலாளிய பொருண்மிய முறையில் எவ்வித மாற்றமும் செய்யாது. கொங்கொங்கை தனது விசேட நிருவாகப் பிரதேசமாக கணிக்கும் என்பதில் ஐயமேற்படநியாயமில்லை. இதனையே டெங் அப்போது ''ஒருநாடு – இருமுறைமைகள் (One Country-Two Systems) என்றார். அத்தோடு மேலும் சில வாக்குறுதிகளையும் உலகத்திற்கு சீனா வழங்கியுள்ளது. சீன மத்திய அரசு ஒரு டொலரைத் தன்னும் வரியாக கொங்கொங்கிலிருந்து பெறாது, மிகக் கூடிய அதிகாரம் பங்கீடு - சட்டவாக்கம், நிருவாக துறையிற்கு வழங்கப்படும். அதன் நிருவாகம் கொங்கொங் மக்களையே மேற்கொள்ளப்படும். இவ்வாறு மிகத் தாராளமான பல முடிவுகளை சீனா அறிவித்துள்ளது.

அப்படியானால் மேற்குலகம் ஏன் பதட்டப்படுகிறது? சனநாயகம் சனநாயகம் என ஏன் சத்தமிடுகிறது? கொங்கொங்கின் கடைசி ஆளுநராக விருந்த கிறிஸ்பற்றன் சீனா குறித்து கடுமையான போக்கினை கடைப்பிடித்து தன்னையொரு சனநாயகக் காவலனாக ஏன் காண்பிக்க வேண்டும்? ''யூன் 30 ம் திகதி எமது இறைமை இழக்கப்பட்டாலும் $1\frac{1}{2}$ இலட்சத்திற்கு மேற்பட்ட பிரித்தானிய கடவுச்சீட்டினைக் கொண்டுள்ள கொங்கொங் வாசிகள் பற்றிய நலன்கள் 1984 நம்மோடு சீனா செய்து கொண்ட உடன்பாடு இவற்றினைக் குறித்து கண்காணிக்கும் கடமை எமக்குண்டு. எனவே யூன் 30 ஆம் திகதியோடு கொங்கொங் பற்றிய எமது கரிசனை முற்றிலும் இழக்கப்பட்டது என சீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பது முட்டாள் தனமானது'' என ஏன் கூற வேண்டும். 1990 பின் அவசர அவசரமாக பொதுத் தேர்தல்கள் நடத்தி சட்டமொன்றினை உருவாக்கி சனநாயக அடிப்படை உரிமைகள் பற்றிய பல சட்டங்களை கடைசி நாள் வரை ஏன் உருவாக்கி அவற்றினை சீனா மதிக்காமல் மேற்குலகம் கண்காணிக்க வேண்டும் என பிரித்தானியா குரல் எழுப்ப வேண்டும்?

இவற்றிற்கெல்லாம் மிகத் தெளிவான பதில் ஒன்றுண்டு. அது தான் கொங்கொங்கை வெறுப்பாக கையளிக்கும் பிரித்தானியா, இப் பிராந்திய மேலாண்மை நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, யப்பான், தென்கொரியா போன்றவை கொங்கொங் சீனாவோடு இணைவதால் ஏற்படப்போகும் புதிய சமநிலை குறித்து பெருத்த கவலை கொண்டிருக்கின்றன. 21ம் நூற்றாண்டின் எழுச்சியுள்ள பொருண்மிய வல்லரசாக சீனா மாறுவதை இயலாமையுடன் பார்த்துக் கொண்டிருக்கும் இந் நாடுகள் எவ்விதத்திலாவது சீனாவின் குடுமியைப் பிடிக்க முடியுமா? என்று முயல்வதன் வெளிப்பாடே இந்தத்தோற்றம். உலக அரசியல் அரங்கின், இராசதந்திர உலகின் உண்மை முகமிதுவே, அதாவது எவர் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை எமது நலன்களே எமக்கு முக்கியம். மக்கள் சீனாவும் இதற்கு விதி விலக்கல்ல என்பது வேறு கதை.

சே. பாலநாரன்


# மகாலிங்கம் களஞ்சியம்

உங்கள் தேவைகளுக்காக எல்லாக் கடைகளும்
ஏறியிறங்கத் தேவையில்லை
சகல பலசரக்குப் பொருட்களும்
தரமான பொருள் விற்பனைக்கும் சாட்சியம்

மகாலிங்கம் களஞ்சியம்

துணுக்காய், மல்லாவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியலுடனான கிராமியக் கலைகள் -2

ஏற்றம் இறைப்பவர்கள் இரவிலும், இறைப்பதுண்டு. களைப்பில்லாமல், வேலை செய்யலாம். அத்தோடு இரவில் நீர் வேகமாக பாய்வதுண்டு. இதற்காக நெல் வயல்களில் ஒரு வயலுக்கு எத்த சால் நீர் வேண்டும் என்பதை கணக்கிட்டு வைத்திருப்பார்கள். அத்தனை சால் இறைத்தும் மடையைத் திருப்பி மறுவயலுக்கு கட்டுவார்கள். சால்களின் எண்ணிக்கை பாடலோடு இணைந்து வரும்.

மயிலை ஐயா, ஒண்ணு... ஆ..
ஒம்பதோடா சாலுா....

இப்படி......

ஒரு வரி திரும்பத்திரும்ப பலமுறை வரும். கம்பனுக்கும், உங்களுக்கும் சிரமங் கொடுத்த பின் எங்கள் விவசாயி - பாடலுக்கு வருகிறான்.

''மூங்கில் இலை மேலே...
தூங்கும் பனி நீரே...
தூங்கும் பனி நீரை...
வசங்கும் கதி ரோனே...''

''நீரே'' என்று ''ஏ''காரத்தில் சென்றவரியை ''நீரை'' என்று ''ஐ''கரத்துக்கு மாற்றி விட்ட போது கம்பன் அயர்ந்து தான் போனான். அப்பால் கதிரோனுக்கு வாழ்த்துக் கூறிக் கொண்டு போனது பாடல்.

இதுதான் கிராமிய இலக்கியத்தின் சிறப்பு. ஏட்டுக்கல்வியில்லாமலே.. தொடங்கி வளர்ந்தவை இவை. இப்போ, அம்மா பாடிய தாலாட்டுக்கு வருவோம். இப்போதெல்லாம் பிறக்கும் குழந்தைகளுக்கு தாலாட்டு கேட்கும் பாக்கியம், ஏன் அம்மா அருகிருந்து சீராட்டும்பாக்கியம் கிடைப்பதும் குறைந்து வருகிறது. தாலாட்டில் தமிழையும், தாய்ப்பாலில் வீரத்தையும், பெற்று வளர்த்த மரபு-தமிழ் மரபு.

மாடுகட்டி நைந்து போன பழங்கயிற்றில், தான்கட்டி நைந்து போன பழைய சேலையில் தொட்டில் கட்டிப் போடுவாள் தாய். ஏன்? வறுமை இல்லாவிட்டாலும் வழமை அது. நைந்த கயிற்றில் தும்பு உதிர்ந்து குழந்தைக்கு சொரியாது. பழைய சேலை மென்மையாக இருக்கும். தாலாட்டு மட்டும், தூக்கியடிக்கும், ...ம்... தன் பிள்ளை அரசாளப் போவதாகவும், அவன் அப்பா, மாமன்மார் எல்லோரும் பெரிய வீரர்கள் என்றும் பாடுவாள் –

''தொட்டிலுமோ பொன்னாலே...
தொடுகயிறோ முத்தாலே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன்மார் வாசலிலே தம்பிக்கு
மருக்கொழுந்து பூப்பூக்கும்...
கொத்தமல்லி பூப்பூக்கும் ..
கொடி மிளகு காய்காய்க்கும்
மைந்தன் விளையாட மாமா,
மான் வேட்டை ஆடி வாறார்,
பிள்ளை விளையாட மாமன், ..
புள்ளி மான் கொண்டு வாறார் ..

அல்லி அரசாண்டா அர்ச்சுனனாம் உன் மாமன். இப்படித் தாலாட்டுக்கள் பாடி வளரும் பிள்ளை, உட்காரும் பருவம்,

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு...
சாயக்கிளியே சாய்ந்தாடு
குத்து விளக்கே ...சாய்ந்தாடு
கோயில் புறாவே சாய்ந்தாடு''

ஓசையை கிரகித்து அதற்கேற்ப அசையப் பயிற்சி நடக்கிறது ..

"கைவீசம்மா - கைவீசு...
கடைக்குப் போகலாம் கைவீசு.''

அடுத்து தலை..

''தலையாட்டி வந்தான் தலையாட்டி
காசு குடுங்கோ பணங் கொடுங்கோ...
கடனுக்கு ரெண்டு சல்லி கொடுங்கோ'' ..

இனிக் குழந்தை எழுந்து நின்று நடக்கப் பழகுதல். கால்களுக் கான பயிற்சி

''கூத்து கூத்து குமரப்பா...
குரக்கன் கொட்டிக் கொண்டு
உமலத் தா.''

ஒரே வகையான சந்தங்கள் குழந்தையின் மனப்பயிற்சியும் கிரகித்தல் பயிற்சியும் தொடங்கப் பட்டு விடும். பேசத் தொடங்கு முன் பாடல்...

''நிலா நிலா... வா...வா...''
''காக்கா .. காக்கா'' .. போன்ற

இலகுவான குழந்தையைக் கவரும் பொருட்கள் பற்றிய மொழி வழக்குப் பாடல். இப்போது மூன்று வயது. மூளைக்கு வேலை. கேள்வி கேட்கப் பழகுதல்.

நிலா .. நிலா... எங்கே போறாய்?
காட்டப் போறன்.
காட்ட ஏன்?
கேட்டி வெட்ட.
கேட்டி ஏன்?
மாடு சாய்க்க.
மாடு ஏன்?
சாணி போட.
சாணி ஏன்?
வீடு மெழுக.
வீடு ஏன்?
பிள்ளை வளர...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னம்மா — மரத்தினிலே
என் மகனே-கரிக்குருவி
என்னகரி-ஒட்டுக்கரி
என்னோடு-நண்டோடு
என்னநண்டு-பால்நண்டு
என்னபால்—ஆட்டுப்பால்
என்னாடு-பொன்னாடு
என்ன பொன்-காக்காப் பொன்
என்ன காக்கை-அண்டங் காக்கை
என்ன அண்டம்-பனை அண்டம்
என்னபனை-முடப்பனை
என்ன முடம்-கால் முடம்
என்ன கால்-மரக்கால்
என்ன மரம்-மாமரம்
என்ன மா-என்னம்மா

மரத்தினிலே... இனி கேட்டவர் பதில் சொல்ல பதில் சொல்பவர் கேட்பவராக மாறுவார். இதேபோன்றுசொற்பயிற்சிக்கான சிறுவர் சந்தங்கள் உணவுப் பண்டங்களையொட்டி வரும். இவை உணவில் விருப்பத்தை ஏற்படுத்தி பிள்ளைகளின் ஆரோக்கியத்தை பாதுகாப்பன.

அவைபற்றி பின்னர் ...

தீபிப்ச்சி

# அளவு கடந்த ஆர்வம்

விஞ்ஞானி எடிசன் தனது ஆய்வுகூடத்திலேயே காலத்தைக் கழிப்பது வழக்கம். இதனைக்கண்ட மனைவி "24 மணித்தியாலமும் உங்கள் வேலையிலேயே மூழ்கியிருக்கிறீர்கள். ஒரு நாளாவது ஓய்வெடுங்கள்" எனக்கடிந்து கொண்டாள். "ஓய்வு எடுத்தால் நான் எங்கே போகலாம்? எனக் கேட்ட எடிசனுக்கு நீங்கள் விரும்பிய இடத்திற்குப் போகலாம் என்றாள் மனைவி. "நான் அங்கேயே போகிறேன்" எனக்கூறி மீண்டும் ஆய்வு கூடத்திற்குள்ளேயே புகுந்து கொண்டார் எடிசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களே! மாணவர்களே! மாணவர்களே!
உங்கள் தேவை என்னவோ அதைத்தான் காத்திருக்கிறது

# போஸ்கோ

நெருக்கடி மிகு சூழலிலும் உங்களுக்குத் தேவையான எழுதுபொருட்கள், காகிதாதிகள், மற்றும் பாடசாலை உபகரணங்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக்கொள்ள என்றும் எல்லோருக்கும் கைகொடுப்பவன்.

**போஸ்கோ**
துணுக்காய்சாலை, மல்லாவி

# கணபதி களஞ்சியம்

உங்கள் தேவை என்னவோ
அதுவே எங்களின் சேவை.
உங்கள் அன்றாடப் பாவனைக்குரிய
பல்பொருட்களையும் நியாயவிலைக்குத்
தருகிறது.

**கணபதி களஞ்சியம்**
பிரதான வீதி, ஸ்கந்தபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துச் சிதறல்கள்

* மனிதன் நாள் ஒன்றுக்கு இரண்டு லீற்றர் உமிழ் நீரைச் சுரக்கின்றான். உமிழ்நீர் என்பது காரமான திரவமாகும். இதில் 98. 5% தண்ணீரும் 1–1.5% கனிம கரிமப் பொருட்களும் உள்ளன.

* வீண்வெளியில் விண்வெளி வீரர்களுக்கு கால் பகுதிக்கு இரத்தஓட்டம் குறைந்து கால்கள் சூம்பியது போல் ஆகிவிடும். ஆகவே பொதுவாக இரு கால்களும் இல்லாதவர்கள் விண்வெளிப் பயணத்திற்கு பொருத்தமானவர்களே. அமெரிக்காவைச் சேர்ந்த 64 வயது நிரம்பியதன் இரு கால்களையும் இழந்தமைக் ரோஜர்ஸ், விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டு சாதனை புரிந்துள்ளார்.

* சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் F.A மெஸ்மர் (Mesmer) என்ற ஆஸ்திரிய நாட்டு மருத்துவர் கருத்தோற்றத்தை நடைமுறையில் பயன் படுத்தத் தொடங்கினார். கருத்தோற்றம் என்பது பிறர் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளும் ஒரு மனிதனின் தயார் நிலை ஆகும். இவர் உருவாக்கிய முறைதான் ''மெஸ்மசம்'' என்ற ஹிப்னாடிசம்.

* சுறுசுறுப்புக்கு பெயர் பெற்ற எறும்புகள் தூங்குவதே இலலை. பிறந்தது முதல் இறப்புவரை எந்நேரமும் விழித்துக் கொண்டு சுறுசுறுப்புடன் ஓடியாடி உழைக்கின்றன. தவிர ஐம்பது முதல் நூறு நாட்கள் வரை எறும்புகள் ஆகாரம் ஏதும் இல்லாமல் உயிர்வாழக் கூடியது.

* பூனைக்கு வெவ்வேறு வண்ணங்களைப் பற்றிய உணர்வே கிடையாது. அதன் கண்களுக்கு எல்லா நிறங்களுமே வெண்மையாகவும் கறுப்பாகவுமே தெரியும்.

* அரசாங்க இரகசியம் அடங்கிய ஆவணங்கள் சுருட்டப்பட்டு கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணாடிப் புட்டியில் அடைத்து கடல் மூலமாக பிறநாடுகளுக்கு அனுப்பப்படுவது அக்கால வழக்கம். இங்கிலாந்துப் பேரரசியான இரண்டாம் எலிசபெத் (1533-1603) ஆட்சிக் காலத்தில் அந் நாட்டில் இவ்வாறு கடல் மூலமாக வந்து சேரும் கண்ணாடிப் புட்டிகளைத் திறப்பதற்காகவே அரச அதிகாரி ஒருவரை நிய மித்திருந்தார்கள். ''அனகார்கர்'' என்பது இவரின் பெயர். இவரைத் தவிர வேறு எவரும் இந்தப் புட்டிகளைத் திறப்பது சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டது.

07. பால்டன் என்ற இடத்தில் பிரிட்டிஷாரை எதிர்த்துப் புரட்சி வெடித்தது. ''நாதன் ஹேல்'' என்ற புரட்சி வீரர் பிரிட்டிஷா ரிடம் சிறைப்பட்டார். மற்றவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டுமே என்று நாதன் ஹேலை ஆப்பிள் மரத்தின் கிளைகளில் தூக்கிலிட்டனர். நாதன் ஹேல் இறப்பதற்கு முன்பு தன்னைச் சுற்றியுள்ளவர்களை நோக்கி ''நான் உயிர்த் தியாகம் செய்யத் துளியும் அஞ்சவில்லை. ஆனால் ஒன்றே ஒன்று தான் என்னை வருத்தப்பட வைத்துள்ளது. தேச விடு தலைக்கு தியாகம் புரிய எனக்கு இரண்டு உயிர்களைக் கடவுள் தரவில்லையே'' என்று வருந்தினார்.

08. யானையின் துதிக்கையில் நாற்பதினாயிரம் தசைகள் உண்டு. பருமனான ஒரு மரத்தை வேருடன் பிடுங்கக்கூடிய அளவு யானையின் துதிக்கை பலம் உண்டு. அது போலவே மெல்லிய புல்லையும் மென்மையாகப் பறிக்கக் கூடிய திறனும் உண்டு.

09. முத்தானது, இயற்கையில் கடலில் உள்ள சிப்பிகளில், சிலவற் றிலிருந்து கிடைக்கிறது. என்ற விபரம் நமக்குத் தெரியும். இது முத்து வாங்குவோர் அனைவரின் தேவையையும் பூர்த்தி செய் யாது. ஆகவே ஜப்பானைச் சேர்ந்த ''மிக்கி மோடா'' என்ப வர், ஒரு புதிய முறையை உருவாக்கினார். அதன்படி உயிருள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிப்பிகளை வளர்த்து, அதை லேசாகத் திறந்து ஒரு சிறிய பொருளைப் போட்டு மீண்டும் தண்ணீரில் விட்டு விடுவது. ஒரு குறிப்பிட்ட காலம் கழிந்ததும் அதை உடைத்துப் பார்த்தால் அதனுள் முத்துக் கிடைக்கும். இப்படி உருவாவது "கல்சர்டு பியர்ல்" எனப்படும். இந்த வகையில், நாம் உண்டாக்கும் முத்தில் எந்த வகை வடிவம் தேவைப்படுகிறதோ அந்த வடிவப் பொருளை உள்ளே செலுத்தினால் அதே வடிவ முத்தைப் பெற்று விடலாம்.

10. உலக நாடுகள் அனைத்தும் புதுப்புது ஆயுதங்களைக் கண்டு பிடிக்கப் போட்டி போட்டுக் கொண்டிருக்கும், இந்த நேரத்தில் அமெரிக்கா டொல்பின் மீன்களைக் கொண்ட தற்கொலைப் படை ஒன்றை அமைத்துள்ளது. அமெரிக்கா புளோரிடா மாநிலத்தில் டொல்பின்களுக்குப் பயிற்சி கொடுக்கும் முகாம் உள்ளது. எதிர் கப்பல்களில் வேவு கருவிகளைப் பொருத்துவதற்கும், கப்பல்களை குண்டு வீசித் தாக்கவும் டொல்பின் மீன்களைப் பழக்குகின்றார்கள். டொல்பின்களின் தலையில் அபாயகரமான குண்டைக் கட்டி எதிரியின் கப்பல்களுக்கு அருகில் செல்ல விடுகின்றனர். உடனே தலையில் உள்ள குண்டு வெடித்து கப்பல்களைத் தகர்க்கும். கப்பலுடன் சேர்ந்து டொல்பின்களும் இறந்து விடும். இப்படி டொல்பின் மீன்களைக் கொல்லுவதற்கு அமெரிக்காவில் பெருமளவில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

11. ஜப்பானில் புதிதாக Magnetic Resonance என்ற புதிய மருத்துவக் கருவி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இரண்டு பக்கமும் இரு பெரிய காந்தத்தை வைத்து விட்டு அதன் நடுவில் நோயாளியை நிற்க வைப்பார்கள். அந்தக் காந்தக் கதிர் ஊடுருவும் போது நோயாளியின் உடலில் எந்தப் பாகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. என்பதையும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பிலிம் காண்பித்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க வைக்கும் சின்ன விஷயங்கள்

01. ஒரு ஆட்டிற்கு மூன்று கால், 10ஆட்டிற்கு எத்தனை கால்கள்?

02. உங்களிடத்தில் ஐந்து இனிப்புகளைத் தந்து அரைமணிக்கு ஒரு இனிப்பு வீதம் சாப்பிடும்படி கூறினால், 5 இனிப்புகளையும் சாப்பிட எவ்வளவு நேரமாகும்?

03. 60m நீளக்கயிற்றில் மாட்டைக்கட்டினால் மாடு எவ்வளவு தூரம் மேயமுடியும்?

04. 3m நீளமும் 3m அகலமும் 3m ஆழமும் உள்ள கிடங்கிலிருந்து எவ்வளவு மண் எடுக்கலாம்?

05. நீராவிக் கப்பல்கள் வராத காலம் அது. பாய்மரக் கப்பல்கள் கடலில் பவனி வந்த நேரம். ஒரு துறைமுகத்தில் அந்தபாய்மரக் கப்பல் நங்கூரமிட்டு இருந்தது. அதன் பக்கவாட்டில் ஒரு நூல் ஏணி தொங்கவிடப்பட்டு இருந்தது. (சரக்குகளை ஏற்றி இறக்க, அவ்வழியே மாலுமிகள் படகுகளுக்கு இறங்க) அந்த ஏணியில் பதினாறு படிகள். கடைசிப்படி கடல் நீரை தொட்டுக்கொண்டிருந்தது. அரை மணிக்கு ஒரு தடவை கடல் நீர் உயரும். அப்போது நூலேணியில் இரண்டு படிகள் கடல் நீரில் மூழ்கும். இப்படி நான்கு படிகள் மூழ்க எத்தனை மணிநேரமாகும்?

இதன் விடைகள் 38ம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபத்தமான அர்த்தத்தோடு ஓர் ஆக்கிரமிப்பு

கு. கவியழகன்

"பௌத்தமதம், சிங்கள இனம், இலங்கைமண் ஆகிய மூன்றும் ஒன்று கலந்து 2500 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் வரலாறானது நவீன காலத்தின் மிகப்பெரியதும் தனித்துவம் வாய்ந்ததுமான ஒரு நிகழ்வாகும்." என்ற வாக்கியத்துடன் தனது முதற்பக்கத்தை ஆரம்பித்த "விகாரையில் புரட்சி" என்ற நூல் D. C விஜயவர்த்தனாவால் பௌத்தத்தின் 2500 ஆண்டுகால நினைவைக்குறிக்கும், புத்த ஜெயந்தியையொட்டி எழுதப்பட்டது. புத்த ஜெயந்தியையொட்டி எழுதப்பட்டதாலும், இந் நூலில் "இலங்கை சிங்கள பௌத்தத்திற்காக புத்தரால் தெரிவு செய்யப் பட்டது." என்ற கருத்து வலியுறுத்தப்பட்டதாலும் சிங்கள மக்கள் மத்தியில் இது முக்கியத்துவம் பெற்றதோடு ஆழமான தாக்கத்தை யும் இது ஏற்படுத்தியது. இதன் விளைவு 1953 இல் இது வெளி வந்த ஒரு சில ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரத்திலிருந்து தெரிய வந்தது. இத்தகைய சிங்கள, பௌத்த நிலையை இலங்கையில் உறு திப்படுத்த எத்தனிக்கும் சிங்கள இனத்தின் அர்த்தமற்ற அபிலா சைதான் தமிழினத்தின் தாயகபூமி மீதான அரக்கத்தனமானதும் சூழ்ச்சிகரமானதுமான ஆக்கிரமிப்பை புரியவைத்தது.

1956 இல் இந்நாட்டின் அரசகரும மொழியாக சிங்களமொழி கொண்டுவரப்பட்டதும், "சிறீலங்கா என்ற பெயர்மாற்றமும், தேசி யக்கொடியாக வாளேந்திய சிங்கமும், பின்னர் இணைக்கப்பட்ட அரசமரக்கிளையும், எழுபதில் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தலும் 1972 இல் அமைந்து முதலாம் குடியரசு யாப்பில் இலங்கை ஒற்றையாட்சிநாடு என்ற பிரகடனமும், தமிழர் இரண்டாந்தரப் பிரஜை என்ற அந்தஸ்தும், இலங்கையின் முதன்மையான மதம் பௌத்தமதம் என்பதும், பௌத்த சாசனத்தைக் காப்பது ஆட்சி யாளரின் கடமை என்பதும், இது போன்ற இங்கு குறிப்பிடாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள அரசின் ஏனைய செயற்பாடுகளும் மேற்சொன்ன கருத்திற்கு சாட்சியமளித்து உறுதி செய்வதாக அமைகின்றது, இவ்வாறான பௌத்த சிங்கள பேரினவாத உணர்வின் அடித்தளத்திலிருந்து தமிழர் தாயகம் மீதான ஆக்கிரமிப்பை அடையாளம் காண்பதுவே இக்கட்டுரையின் நோக்கம்.

''இலங்கைத் தீவானது மிகப் பழைய காலந்தொட்டே இரு வேறு தேசிய இனங்களால் வெவ்வேறு பகுதிகளில் உரிமை கொண்டாடப்பட்டுள்ளது. இத்தீவின் நடுப்பகுதியும், தென்பகுதியும் வளவையாற்றிலிருந்து சிலாபம் வரையான மேற்குப் பகுதியும் சிங்கள இனத்தவரால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இத்தீவின் வடக்குக் கிழக்கு நிலப்பகுதிகள் மலபார் (தமிழர்) மக்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாகும். இவ்விரு தேசிய இனங்களும் இவ்விரு பகுதியினரும் மதத்தாலும், மொழியாலும் வாழ்க்கைப் பண்பாட்டாலும் முற்றிலும் வேறுபட்டவர்களாவர்'' இது கி. பி. 1796 இல் இலங்கை பிரித்தானியர் கையில் வந்தபோது அதன் முதலாவது தேசாதிபதியான நோத் பிரபுவின் காரியதரிசியான கிளைகோன் அவர்கள் 1799 இல் வெளியிட்ட குறிப்பு, இதைவிட வரலாற்று ஆய்வாளர்களான பேராசியர் இந்திரபாலா, ரகுபதி, தெரனியாகல ஆகியோர் விஜயன் வந்ததாக கூறப்படும் காலத்திற்கு முன்பே வடக்கு கிழக்கு பகுதிகளில் இராசதானிகளைக் கொண்ட அரசுகள் இருந்ததாக தொல்லியற் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்துகின்றனர். எப்படியோ இலங்கைத் தீவின் இரண்டு தேசிய இனங்கள் உண்டென்பது உறுதிப்படுத்தப்பட்டதொன்றே.

பிரித்தானியாவின் காலனித்துவத்தின் கீழ் அவர்களின் நிர்வாகத் தேவைக்கேற்ப இவ்விரு இனங்களையும் ஒன்றிணைத்த புதிய எல்லையொன்று உருவாக்கம் பெற்றது. பின் காலனித்துவம் காலாவதியாகிப்போன காலகட்டத்தில் (சுதந்திரம் கொடுத்த காலம்) தனது குடியேற்ற நாடுகளின் எல்லைகளைப் பிரித்தானியா தனது நவகாலனித்துவ நலன்களுக்கு ஏற்ப அதன் எல்லைகளை தீர்மானித்தது. இது பிரித்தானியாவின் நோக்கு நிலையிலிருந்து வரையறை செய்யப்பட்டதே தவிர சொந்த நிலத்திற்குரிய மக்களின் இறைமைக்கேற்ப வரையறை செய்யப்பட்டதல்ல. அவ்வாறானதொரு எல்லையின் உருவாக்கமே இலங்கை என்ற ஒரு நாடு. இன்னொரு நாட்டின் நலன்களின் தேவைக்கேற்ப கூட்டுவாழ்க்கையின் எல்லை பற்றியும் ஆட்சி முறை பற்றியும் எடுக்கப்படும் தீர்மானம் சொந்த நாட்டின் மக்களு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய வாழ்வியல் தேவைகளை அவற்றின் உரிமைகளை திருப்தி செய்ய உதவப்போவதில்லை என்பது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டியது.

பிரித்தானியாவின் நலன்களை பிரதிபலிப்பதற்கு சிங்கள பெரும் பான்மையினரிடம் ஆட்சி உரிமையை கையளிப்பது சாதகமானது என்ற வகையில் ஒப்படைக்கப்பட்ட ஆட்சி, மறுவளத்தில் சிங்கள இனம் விரும்பும் இலங்கை மீதான ஏகோபித்த உரிமையை நிலைநாட்டுவதற்கும் தமது வரலாற்றுப் பகைவர்களாகக் கருதும் தமிழர்களை ஓரம் கட்டுவதற்குமான வாய்ப்பை சிங்களத்தின் கையில் கொடுத்திருந்தது. அந்நாளிலிருந்து தமிழ்நிலம் மீதான திட்டமிட்ட ஆக்கிரமிப்பை நாம் அடையாளம் காணலாம்.

இவ்வாறு அமைந்த தமிழ் நிலம் மீதான ஆக்கிரமிப்பானது பின் வரும் இலக்குகளைக் கருத்திற் கொண்டு செய்யப்பட்டதாகும்.

01 ஒரு தேசிய இனத்தின் பண்பாகத்திகழும் தொடர் நிலப்பரப்பைத் துண்டாடி விடுவதன் மூலம் தேசிய இனத்திற்கான அடையாளத்தை அழிப்பது.

02 தமிழர்களைப் பிற்காலத்தில் வந்து குடியேறி, சிதறி வாழும் ஒரு மக்கள் கூழுவாக காட்டுவதன் மூலம் சுயநிர்ணய அந்தஸ்தற்றவர்களாக்குவது.

03 தமிழ் நிலங்களைத் துண்டாடுவதன் மூலம் கூட்டு வாழ்க்கைக்கான சந்தர்ப்பத்தை ஒழித்து ஒருமைப்பாட்டு உணர்வை அல்லது தமிழ்த் தேசிய உணர்வை இல்லாமற்செய்வது.

04 சிங்கள மொழிக்கும், சிங்கள குடியேற்ற பிரதேசத்திற்கும் அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற கல்வி, தொழில் அபிவிருத்திபோன்ற வாய்ப்புக்களால் சிங்களப் பெரும்பான்மை இனத்துக்குள் தமிழரைக் கவர்ந்து இழப்பதன் மூலம் அவர்களின் மொழி கலாச்சாரம் என்பவற்றை இழக்கச் செய்வது. தமிழினத் தூய்மையை (தனித்துவத்தை) அருகிப் போகச்செய்வது அல்லது சிதைப்பது.

05 சிங்களப் பெரும்பான்மை இனத்துடன் சேர்ந்து உருவாக்கப்படுகின்ற புதிய தேர்தல் எல்லைகளால் பாராளுமன்றில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை வெகுவாக குறைப்பது அல்லது அழிப்பது.

இத்தகைய ஆபத்தானதும் சூழ்ச்சிகரமான திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பேரினவாத அரசுகள் திட்டமிட்ட குடியேற்றங்கள், எல்லை மாற்றங்கள், அபிவிருத்தி திட்டங்கள், கிராம விஸ்தரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்கள், இனக்கலவரங்கள் என்ற போர்வையின் கீழ் தமதுகுறிக் கோள்களைச் செயற்படுத்தினர்.

இவ்வாறு தமது குறிக்கோள்களை அடைவதற்காக சிங்கள மக்களை குடியேற்றுவதோடு நின்றுவிடாது அவ்வாறு குடியேற்றப் படும் பிரதேசங்களுக்கு புதிதாக சிங்களப் பெயர்களைச் சூட்டியும், பௌத்த விகாரைகளைக் கட்டியும், ஏனைய சிங்களத் தொகுதி களோடு பெருந்தெருக்களை இணைத்தும், புதிய சிங்கள தேர்தல் தொகுதிகளை உருவாக்கி (சேருவெல, அம்பாறை) அவ்வாறான பிர தேசங்கள் சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதைக் காட்ட முனைவதோடு அவற்றை பாடசாலை வரலாற்றுப் பாடத்தினூ டாக மாணவர்களுக்கு திணிப்பதிலும் அரசு தீவிரமாக ஈடுபட்டு வந்தது. இவ்வாறு சிங்களப் பேரினப்பட்ட குடியேற்றங்கள்.

## குடியேற்றத் திட்டங்கள்

**திருகோணமலை**

1. கல்லோயா குடியேற்றத் திட்டம்
2. உல்கித்த ,,
3. மாதுறு ஓயா ,,
4. கோமறாங் கடவெல ,,

**அம்பாறை**

1. சங்கமம் குடியேற்றத் திட்டம்
2. அம்பலின் ஓயா ,,
3. நாவலாறு ,,

**வவுனியா**

1. உலுக்குளம் குடியேற்றத் திட்டம்
2. பாவற்குளம்
3. மாமடுவ ,,
4. மடுக்கந்த ,,

**முல்லைத்தீவு**

1. வெலியோயா குடியேற்றத் திட்டம்.

**மட்டக்களப்பு**

1. நாமல்வத்தை குடியேற்றத் திட்டம்
2. சாகபுர ,,
3. திகாமடு வெல ,,
4. மாகாதிவுல்வெவ ,,
5. கந்தளாய் ,,
6. சேருவேல ,,
7. வெண்டரசபுர ,,
8. பதவியா ,,
9. மொறவெவா ,,
10. மொறவீவா ,,
11. வாசல்கடவெல ,,
12. தெகிவத்தை ,,
13. அல்லை ,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான குடியேற்றங்கள் மூலம் சிங்கள அரசு தனது இலக்குகளில் ஈட்டிய வெற்றியினை வடக்கு கிழக்கில் இனவாரியான குடிசனப் பரம்பலில் ஏற்பட்ட மாற்றத்தின் ஊடாக அவதானிப்பது பொருத்தமானதும் சுலபமானதுமாகும்.

வடக்கு கிழக்கு மகாணங்களில் சிங்கள தமிழ் இன ஒப்பீடு. பட்டியல் 01

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் | 100 தமிழருககு சிங்களவர் |
|---|---|---|---|
| 1921 | 12,500 | 4,60,000 | 100: 03 |
| 1981 | 2,74,600 | 13,65,300 | 100: 20 |

மேலுள்ள பட்டியல் மூலம் 1921 இல் 12,500 சிங்களவர் மட்டுமே வடக்கு கிழக்கில் இருந்தனர். இவர்கள் குறிக்கப்பட்ட பிரதேசத்தில் என்றில்லாமல் வியாபார நோக்கங்களிற்காக வடக்கு கிழக்கு முழுவதும் ஆங்காங்கே இருந்தார்கள் என்பதை அதன் தொகையிலிருந்து புரிந்து கொள்ள முடியும். அதாவது 100 தமிழருக்கு 03 சிங்களவர் என்ற விகிதத்தில் இவர்களின் இருப்பு இருந்தது. ஆனால் குடியேற்றங்களின் பின்னான காலமான 1981 இன் 100 தமிழருக்கு 20 சிங்களவர் என்ற விகிதத்தில் சிங்களவரில் இருப்பு இருந்தது. இவ்வாறான உயர்விற்கு அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களே வழிவகுத்தது என்பதை மேலே உள்ள குடியேற்றப்பட்டியல் மூலம் புரிந்து கொள்ள முடியும். வடக்கு கிழக்கு மாகாணத்தின் நிலைமை இவ்வாறு இருக்க நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட இன விகிதாசார மாற்றத்தை சற்று அவதானிப்போம்.

வடக்கு கிழக்குத் தவிர்ந்த மகாணங்களின் சிங்கள தமிழ் இன ஒப்பீடு. பட்டியல் 02

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் | 100சிங்களவருக்கு தமிழர்கள் |
|---|---|---|---|
| 1921 | 28,01 700 | 9,59 600 | 100: 33 |
| 1981 | 1,07,65000 | 13,31,500 | 100: 12 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுள்ள பட்டியலைப் பார்ப்போமனால் 1921 இல் 100 சிங்கள வர்களுக்கு 33 தமிழர்கள் என்றிருந்த இருப்பு 1981 இல் 100: 12 என்ற விகிதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாறானதொரு வீழ்ச் சிக்கு இருகாரணங்கள் இருக்க முடியும் என்றே நம்பப்பட்டது.

01. சிங்களவரைவிட தமிழரின் சனத்தொகை வளர்ச்சி விகிதம் குறை வாக இருக்க வேண்டும்.

02. தமிழர்கள் பெருமளவில் இப் பகுதியிலிருந்து குடிப்பெயர்வினை மேற்கொண்டிருக்க வேண்டும்.

உண்மையில் இவை இரண்டுமே சரியானது தான். தமிழர்களின் எழுத்தறிவு விகிதம் கூடுதலாக இருந்தாலும் ஒப்பீட்டளவில் வாழ்க் கைத்தரம் உயர்ந்து, காணப்பட்டதாலும் குடும்பக்கட்டுப்பாட்டின் தேவை உணரப்பட்டிருந்தது. இதனால் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவாகவே காணப்பட்டது. குடிப்பெயர்வு என்பதை கவனிப்போமானால் இனக்கலவரம் என்ற போர்வையில் தமிழர் கள் விரட்டியடிக்கப்பட்டது உண்மை. இது இனவாரியான சனப்பரம் பலில் பெரும்மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடியதல்ல. ஏனெனில் 1981 ற்கு முந்தியகாலப் பகுதியில் வெளிநாடுகளுக்கான பெருமளவு குடிப்பெயர்வுகள் இடம்பெறவில்லை. ஆக விரட்டியடிக்கப்பட்ட தமிழர்கள் வடக்குகிழக்கு பகுதிகளிலேயே தஞ்சம் புகுந்தனர். இது பெருந்தொகையில் நடைபெற்றிருக்குமேயானால் வடக்கு கிழக்கில் தமிழர்களின் செறிவு விகிதம் அதற்குத் தக்களவு உயர்ச்சியைக் கண்டிருக்கவேண்டும். அவ்வாறு இல்லையென்பதை பட்டியல் 01 எடுத்துக்காட்டுகிறது. ஆனால் மலையக மக்களின் பிரஜா உரிமைபறிக்கப்பட்டு 3லட்சத்து 40 ஆயிரம் பேரும் அவர் சந்ததியினரும் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர். எனவே இவையிரண்டுமே பட்டியல் காட்டும் வீழ்ச்சிக்கு காரணம் என்ற முடிவுக்கு வரலாமா? அப்படி வருவதாயின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த தமிழர் செறிந்து வாழ்ந்த பிரதேசங்களான புத்தளம், நீர்கொழும்பு மற்றும் காலி, மொறட்டுவ போன்றவை எப்படி சிங்களவரின் நிலமாக மாறியது? அத்துடன் வடக்கு கிழக் கில் தமிழரின் சனத்தொகை வளர்ச்சி வீதம் 1921 ற்கும் 1981ற்கும் இடையில் ஏறத்தாழ மும்மடங்காயிருக்க ஏனைய பிரதேசத்தில் வெளியேற்றப்பட்டவர்களின் எண்ணிக்கையைச் சேர்த்தாலும் இரு மடங்கையும் எட்டவில்லையே. எனவே பட்டியல் காட்டும் வீழ்ச்சிக்கு மேற்குறித்த இரு காரணங்களையும் விட மூன்றாவதாக ஒன்றி ருப்பது தெளிவாகிறது. மூன்றாவது காரணம் 'சிங்கள மொழிக்

கலாச்சாரத்திற்குள் தமிழர்களை உள்வாங்கி அரசு திட்டமிட்ட ஒரு இனமாற்றத்திந்கு உள்ளாக்கியிருக்கிறது.' என்பதைத் தவிர வேறொன்றில்லை. என்பதை மேற்சொன்ன விடயங்களிலிருந்து புரிந்து கொள்ளலாம். புத்தளம், நீர்கொழும்பு போன்ற தமிழ்ப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் சிங்கள மொழியைப் பேசுகின்றவர்களாக இன்று மாறியிருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இவ்வாறு மாற்றியதன் மூலம் அந்நிலப்பரப்பு சிங்களவரின் நிலமாகி இருக்கிறது. இன்றுங் கூட தென்பகுதிகளில் உலாவும் தமிழ்ப் பெயர்களையுடைய தமிழர்கள் கூட சிங்களம் தெரிந்தும் தமிழ் தெரியாதவர்களாக இருப்பதை நாம் காணலாம். இவ்வாறான தொரு மாற்றத்தையே சிங்கள அரசு வடக்குக் கிழக்கில் ஏற்படுத்த விழைந்தது.

இவ்வாறு அரசின் பல்வேறு முனையிலான திட்டத்தின் வெற்றியினை நாடளாவிய இனவாரியான குடிசனப் பரம்பலின் மூலம் தெரிந்துகொள்ள முடியும்.

நாடளாவிய சிங்கள தமிழ் இன ஒப்பீடுப்பட்டியல் 03

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் | 100 சிங்களவருக்கு தமிழர்கள் |
|---|---|---|---|
| 1921 | 28,14 200 | 11,19,700 | 100: 40 |
| 1981 | 1,09,85,600 | 26,96,800 | 100: 25 |

மேலுள்ள பட்டியலின் மூலம் 1921 இல் 100 சிங்களவர்களுக்கு 40 தமிழர்கள் என்ற விகிதத்தில் இருந்த குடிசன அமர்வு 1981 இல் 100: 25 என வீழ்ச்சி கண்டிருப்பதன் மூலம் அரசுதன் சூத்திரதாரமான திட்டத்தில் எந்தளவு தூரம் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்பதனை அவதானிக்கலாம். இங்கே 1981இலிருந்து 1997 வரையிலான 19 வருடகால மாற்றம் புள்ளிவிபரங்கள் இல்லாத காரணத்தால் ஆய்விலெடுக்கப்படவில்லை. ஆயினும் இன்று வடக்குக் கிழக்கில் தமிழர்களின் இன விகிதாசாரம் பெரும் வீழ்ச்சியைக்கண்டிருக்கும் என்றே நம்பலாம். ஏனெனில் 1981 இன் பின்பே வடக்கு கிழக்கு பகுதிகளில் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம், கிராம விஸ்தரிப்பு திட்டம் என்ற போர்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் சிங்களக்குடியேற்றங்கள் நடைபெற்றது. மணலாறு வெலியோ யாவானதும் அண்மையில் அனுராதபுர மாவட்டத்தோடு இணைக் கப்பட்டதும் இதன் பின்பேயாகும்.

அன்று நிலைமை அவ்வாறிருக்க இன்றிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், திருகோணமலையின் பெரும் பகுதி நிலம் ஏற்கனவே தமிழருடமிருந்து பறிபோயிருந்தும் எஞ்சியிருந்த நகர்ப்பகுதியின் ஒரு பிரதேசமான ''லிங்கநகர்'' இராணுவத்தால் போலிக்காணி உறுதி மூலம் அபகரிக்கப்பட்டு, தமிழ் மக்களை வெளி யேற்றி சிங்கள மக்களைக் குடியேற்ற, நடவடிக்கைகள் எடுத்துள் ளது. இத்தோடு இராணுவம் ஆக்கிரமித்துள்ள மன்னார் வவுனியா வீதியிலுள்ள பறையனாளங்குளத்திற்கு ''சப்புமல்புர'' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு ரூபவாகினியிலும் அறிவிக்கப்பட்டது. இது சிங்கள இனவாத ஆக்கிரமிப்பு உணர்வின் தொடர்ச்சியினை உறுதி செய்கின்றது.

அன்று குடியேற்றம், அபிவிருத்தி, கிராமவிஸ்தரிப்பு என்று அர்த்தம் கற்பிக்கப்பட்டு நடந்த ஆக்கிரமிப்புக்கள் இன்று பயங் கரவாத ஒழிப்பு, புலிகளிடமிருந்து வடக்குக் கிழக்கு விடுவிப்பு என்ற அபத்தமான பிரச்சாரத்தோடு நடைபெறுகின்றது. இதுவே காலத்திற்கு ஏற்ப ஏற்பட்ட வேறுபாடு.

எப்படியோ, இலங்கை சிங்கள பௌத்தத்திற்கே உரிய நாடு என்ற நிலையை அடைவதற்காக இனவாத அரசுகள் எவ்வித நட வடிக்கைகளையும் எடுக்கத் தயங்கப் போவதில்லை. என்பதையே கடந்த வரலாறும் நடப்பரசியலும் காட்டி நிற்கிறது. இந்நிலை யில் தமிழினம் தனது தாயக இருப்பை, தேசிய அடையாளத்தை தேசிய வாழ்வைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமாயின் ஆக் கிரமிப்பு அரசிற்கெதிரான ஒரு தேசிய பலத்தைப் பெற்று தனது தனித்துவத்தை நிலைநாட்டினாலொழிய இது சாத்தியப்படப்போவ தில்லை என்பதே இவ் ஆய்வின் முடிவாகக் கொள்ள கூடிய யதார்த்த மாகும்.

## குறிப்பு:

மூலம் 1921, 1981 சனத்தொகை. குடிமதிப்பீடு, மதிப்பீட்டில் முஸ்லீம்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிக்க சிந்திக்க

## கல்வியும் கல்லூரியும்

"கல்லூரிகளை ஏன் அறிவுக் களஞ்சியங்கள் என்று அழைக்கின்றோம். தெரியுமா?" என்று கேள்வி கேட்டார் அறிஞர் ஒருவர்.?

யாரும் பதில் தரவில்லை.

உடனே அவர் "கல்லூரியில் சேரும் மாணவர்கள் ஓரளவு அறிவுடன் வருகிறார்கள். அதை விட்டுச் செல்கிறவர்கள் எதையுமே எடுத்துச் செல்வதில்லை. எல்லா அறிவும் அங்கேயே தங்கி விடுகிறது. அதனால் தான்" என்று பதில் தந்தார்.

## கால்களின் நீளம்

டக்ளஸ் என்ற அறிஞர் மிகவும் குள்ளமான தோற்றம் உடையவர். ஒரு முறை அவர் ஆபிரகாம் லிங்கனிடம் உரையாடி விட்டுச் சென்றார்,

அப்பொழுது அங்கு வந்த லிங்கனின் நண்பர்கள் டக்ளசைக் கிண்டல் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் லிங்கனைப் பார்த்து "மனிதனின் கால்கள் பொதுவாக எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்?" என்று கேட்டார்கள்.

"உடலிலிருந்து தரையைத் தொடுமளவு நீளம் இருக்க வேண்டும்". என்று பதில் தந்தார் லிங்கன்.

## இதுவா கருத்து?

தந்தி முறையைக் கண்டு பிடித்த சாமுவேல் மோர்ஸ் சிறந்த ஓவியராகவும் விளங்கினார்.

மரணப் படுக்கையில் துன்ப வேதனையில் துடிக்கும் ஒருவனின் ஓவியத்தை வரைந்த மோர்ஸ் தன் நண்பரான மருத்துவரிடம் அதைக் காட்டினார்.

'இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று" கேட்டார்.

அந்த ஓவியத்தை நன்றாகப் பார்த்த மருத்துவர் "அவனுக்கு மலேரியா நோய் கண்டுள்ளது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி அந்த ஆட்லறி மழை சாத்தியம்?

முகில்களுக்கு சில்வர் அயோடைட் (Silver Iodide) தூவி அதன் மூலம் செயற்கை மழையை உருவாக்கலாம். 1946 இல் வின்சென்ற் ஸ்சேபர் (Vincent Schaefer) என்பவரும் ஏர்விங் லோங்மூர் (Irving Longmuir) என்பவரும் நியூயோர்க்கிலுள்ள செனெக்ரடியிலமைந்திருக்கும் ''ஜெனரல் எலெக்ரிக் றிசேச்'' ''லபோரட்டறீஸ்'' (General Electric Research Laboratories) என்னும் ஆய்வு

மாறித் தரையை நோக்கி விழக் கூடியன. இவை மிகச் சிறியனவாயிருக்கும் பட்சத்தில் தரைக்கு வந்துசேருமுன்னரே ஆவியாகி விடவும் கூடும்.

நீர்த்துளிகள் பெரிதாவதற்கு ஒரு காரணம் அவை குளிர்ந்து ஒன்றிணைவதாகும். ஓரளவு பனித்துகள்களும், நீர்த்துளிகளும் காணப்படும் முகிலில்

உறைநிலையிலும் ...
லது 20°C கள் கீ...
பனிக்கட்டியாக ம...
குக்காரணம் யா...
லிருக்கும் நீர்மூ...

மகாபார...
ணன் வா...
அம்பு விட்...
ளைத் தரு...
இன்று வா...

## அன்று அம்பு விட்டதால்
## இன்று ஆட்லறி விட்டதால்

# செய...

ஆட்லறி எ...
தருகிறார்க...
மெய்ஞ்ஞா...
விஞ்ஞான...
யான போட்...

கூடத்தில் தமது பணியைத் தொடங்கினர். மழைமுகில்களைச் செயற்கையான முறையில் தூண்டி விடுவதன் மூலம் மழையைத் தருவிக்கலாம். என்பதை இந்த ஆய்வு நிருபித்தது.

முகில்கள் பில்லியன் கணக்கான நீர்த்துளிகலானவை. மழையாகப் பொழியுமளவிற்கு இந்த நீர்த்துளிகள் போதாதவையாகும். நான்கிலொரு மில்லிமீற்றரின் அளவுக்கு அல்லது அதனிலும் பெரிதான இத்துளிகள் பெருக்கும் போது தான் மழைத் துளிகளாக

இந்நீர்த்துளிகள் நீராவியாகி பனித்துகள்களோடு இணைந்து பெருத்துவிடும். முகிலின் வெப்ப நிலையானது பெரும் பாலும் உறைநிலைக்கு (Freezing) கீழாகவேயுள்ளதால் இந்த நீர்த்துளிகள் இலகுவாகஉறைந்து விடும் சாத்தியம் உண்டு. ஆனால் நீரின் வெப்பநிலை அதன்

மையானதாக இரு...
கட்டியுருவாவதற்...
பொருளான தூசி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ம் பார்க்க $10^{\circ}C$ அல் ... கீழாக இருந்தாலும் ... மாறுவதில்லை. இதற் ... யாதெனில் முகிலினுள் ... முழுக்க முழுக்கத்தூய்

...ாரத்தில் கண் ...ானை நோக்கி ...ிட்டதால் இரு ...ருவித்தான். ...வானை நோக்கி

மில்லாமலிருப்பது மாறும். இந்நிலையில் இந் நீர்த்துளிகளுக்கு மிக நுண்ணிய துகள்களேதும் வழங்கப் பட்டால் அவை உறைந்து விரைவில் பெரிதாகிநிலத்தை நோக்கி விழுமளவுக்கு வந்துவிடும். பின்னர் வெப்பநிலை ஏறஏற உருகி மழையாக நிலத்தை அடையும்.

சில்வர் அயோடைட் (Silver

னத்திலிருந்து வீசப்படலாம். உந்து விசைக்கலம் ஒன்றினால் ஏவிவிடப்படலாம் அல்லது வளியின் ஓட்டத்தினால் அள்ளுப்பட்டு வான் நோக்கி எடுத்துச் செல்லப்படுவதற்கென்று தரைமட்டத்திலும் வீசப்பட்டுவிடலாம். சோவியத் நாட்டில் சில்வர் அயோடைட் துகள்களை முகிலுக்குட் செலுத்தி வெடிக்கச் செய்வதற்காக 70 மி.மீ ஆட்லறிப் பீரங்கி பயன்படுத்தப்படுகின்றன. அவை சரியான உயரத்திற்குச் சென்று வெடித்துத் துகள்களைப் பரவச் செய்கின்றன.

# ...ற்கை இருள் மழை

...எய்து மழையை ...ர்களே, சபாஷ்! ...நானத்திற்கும் ...னத்திற்கும் சரி ...ாட்டி.

...இருப்பதும், ஒரு பனிக் ...கற்கு வேண்டிய மையப் ...ரசி துகள்களே து

Iodide) போன்ற சின்னஞ்சிறுதுகள்கள் மிக நன்றாகக் குளிர்வடைந்த முகில்களுக்குள் சேர்க்கப்படும்போது பனிக்கட்டிகள் வேகமாக வளர்வதற்கு அவை உதவுவதாக வின்சென்ற் ஸ்சேபர், ஏர்விங் லோங்மூர் ஆகியோர் நிரூபித்தனர். இந் நுண்துகள்கள் விமா

முகில்கள் மிகவும் குளிர்வடைந்த நிலையில் இருக்கும் பட்சத்தில் இத்தொழில் நுட்பம் நன்கு பயன்தரவல்லது. அதாவது ஏற்பட இருந்த மழை வீழ்ச்சியை 5 மடங்குக்கு அதிகரிக்கச் செய்யும். ஆயினும் எந்தளவு மழை வீழ்ச்சி ஏற்படவிருந்ததென்று முன்கூட்டியேகூறமுடியாத நிலையில் பொருளாதார ரீதியில் இது எந்தளவுக்குக்கட்டுப்படியாகக் கூடியது என்பது பற்றிக் கேள்விகள் இருக்கத்தான்செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் ஓர்

இவன் ஒரு மாணவன்; பின்னர் மருத்துவன், மருத்துவ மாண வனாய் இருந்த போதே புரட்சி செய்தவன், போராளியாய் மாறிய பின்பும் மருத்துவனாய் இருந்தவன். ஏகாதிபத்தியம் இவனின் எதிரி; ஏகாதிபத்தியத்திற்கு இவன் ஓர் அச்சுறுத்தல். ஒடுக்கப்பட்ட மக்க ளுக்கு இவன் ஓர் உதய சூரியன். ஆம்! அவன் தான் எர்னெஸ்டோ சேகுவேரா.

மாணவனாய், மருத்துவனாய், ஒரு தலைசிறந்த கெரில்லாத் தலைவனாய் வரலாற்றில் பிரகாசிக்கும் அந்தப் பெரும் மனிதன் தான் சேகுவேரா. அமெரிக்காவின் காலனித்துவக் கால்களால் மிதி பட்டு 'அடிமைகளாய் இருண்ட வாழ்வு வாழ்ந்த மக்களின் துயர் துடைக்க உதித்த சூரியன். கௌத்தமாலா, மெக்சிக்கோ, கியூபா பொலிவியா... என அமெரிக்கக் கண்டத்து நாடுகளில் ஒரு விடுத லைப் போராளியாகவும், தலைசிறந்த மருத்துவனாகவும் உலாவந்த விடுதலைப்புயல்.

1928 யூன் 14, எலும்பும் தோலுமான உடலுடன் பிறந்த சேகுவேராவை அன்றைய நிலையில் சொல்வதானால் அவன் ஒரு "குறை மாதக் குழந்தை" தீராத ஆஸ்மா நோயாளி இப்படியாக எதிர்காலத்திற்கான எந்தவொரு அடித்தளமுமின்றி உதித்த சேகு வேராவை தனது அயராத முயற்சியால் ஒரு உடல் கட்டுடைய குழந்தையாகவும், மனவுறுதி படைத்த செயல் வீரனாகவும் மாற்றி யிருந்தார் அவனின் தந்தையார்.

தந்தை இட்ட அடித்தளத்திலிருந்து ஒரு பிரகாசமான எதிர் காலத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த சேகுவேரா தனது மாணவப் பருவத்தை அதற்காக தவறாது பயன்படுத்திக் கொண் டான். தனது விருப்பப்படியே ஏழைகளுக்குச் சேவை செய்யும் ஒரு மருத்துவனாக வர விரும்பித் தனது மருத்துவப் படிப்பை ஆரம்பித் தான். "எல்லோரையும் போல நானும் வாழ்க்கையில் வெற்றி பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்று விரும்பினேன். பிரபலமான மருத்துவ ஆராய்ச்சி அறிவியலாளனாக வரவேண்டும் என்று கனவு கண்டேன். இராப் பகலாக உழைத்து மனித சமுதாயத்திற்கு உபயோகமாக இருக்கும் ஏதாவதொன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று கனவு கண்டேன் நானும் எல்லோரையும் போல புறச் சூழலின் குழந்தை தான்". என்று கூறும் "சே" இன் துடிப்பில் இருந்து அவனது மன அவாவினை புரிந்து கொள்ள முடியும்.

இப்படியாக எல்லோரையும் போலவே தானும் வாழ நினைத்தவன் ஏன் புரட்சியாளனாக மாறிக் கொண்டான்? அவனே கூறுகிறான் " பணம் இல்லாத காரணத்தால் நோயுற்ற குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் மருத்துவம் அளிக்க முடியாமற் போகிற அவலத்தை நான் கண்டேன். பிள்ளையின் மரணத்தைச் சகித்திருக்கும் அளவுக்குத் தொடர்ச்சியான பட்டினியாலும், துன்பங்களாலும் மனிதன் மிருக நிலைக்கு இழிந்திருப்பதை நான் கண்டேன். இவ்வாறாக மருத்துவ விஞ்ஞானத்திற்குப் பெரும் தொண்டாற்றுவதைக் காட்டிலும் மக்களுக்கு உதவக் கூடிய கடமை ஒன்று இருக்கிறது என்பதை நான் கண்டு கொண்டேன்.

ஆம் .. ஏழைகள் அன்று சொரிந்த கண்ணீர்த்துளிகள் தான் அந்த மாணவனை ஒரு போராளியாக மாற்றியது. எல்லோரையும் போல தனக்காக வாழ நினைத்த அந்த மாணவனை எல்லோருக்காகவும் வாழ வேண்டியதன் தேவையை உணர்த்தியது. ஒடுக்கப்பட்டவருக்காக உயிரையும் கொடுக்கும் உத்தமனாக்கியது. அடிமை மக்களுக்காக அயராது உழைத்தவன் அதற்காகத் தன் ஓயாத பணிகளிடையேயும் கற்க வேண்டியதை உணர்ந்தான். கியூபா அதிபர் ஃபிடல் காஸ்ரோ பின்னொரு நாளில் சேகுவேராவிற்கு புகழஞ்சலி செலுத்தும்போது.

" அவருக்கு ஓய்வு நாளே கிடையாது; ஓய்வு மணித்துளிகள் கூடக்கிடையாது; அவரது அலுவலகத்தின் ஜன்னல் வழியாக நாம் பார்த்தால் இரவு முழுவதும் விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதையும், அவர் வேலை செய்து கொண்டிருப்பதையோ, படித்துக்

# எடுத்துக்காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதையோ காணலாம். அவர் அனைத்துப் பிரச்சினைகளையும் ஒரு மாணவன் என்ற நிலையில் இருந்து அணுகியதால், ஒரு களைப்படையாத படிப்பாளியாக விளங்கினார். கற்றுக்கொள்ள அவருக்கு இருந்த தாகம் தணிக்க முடியாததாக இருந்ததால் அவர் தனது தூக்கத்திலிருந்து நேரத்தைத் திருடிப் படிப்பதற்குச் செலவழித்தார்'' என்று நினைவு கூர்ந்தார்.

சேகுவேராவின் இந்த அயராத உழைப்புக்கு அவனது உடல் நிலை இடங்கொடுக்காத போதும் துன்பப்பட்ட மக்களுக்காக தன்னால் உழைக்க முடிந்தது பற்றி ''சே'' இப்படிக் கூறினார். ''தேய்ந்து போன எனது கால்களையும், ஓய்ந்து போன எனது நுரையீரல்களையும் எனது மனவுறுதி நிமிர்த்தி வைக்கும். அப்படிப் பட்ட மன உறுதியை நான் ஒரு கலைஞனின் நுட்பத்தோடு செதுக்கி முழுமையாக்கியுள்ளேன்'' இப்படியாகத் தன் ஓயாத பணிகளால் மக்களுக்கு ஓர் முன்னுதாரண மனிதனாக வாழ்ந்து காட்டியவனை ஃபிடல்காஸ்ரோ அவர்கள் கியூப மக்களின் ஒரு தலைமுறைக் குரலாக பின்வருமாறு பதிவு செய்கிறார்.

''நமது புரட்சிப் போராளிகள், நமது போர் வீரர்கள், நமது மக்கள் எப்படி விளங்க வேண்டும் என்பதை நாம் வர்ணிக்க வேண்டும். என்றால் தயக்கமில்லாமல் நாம் கூறுவோம். ''சே' போல இருக்கட்டும். நமது வருங்காலத் தலைமுறையினர் எப்படி விளங்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். என்று கேட்டால், நாம் கூறுவோம். ''சே'' போல இருக்கட்டும். நமது குழந்தைகள் எந்த வழியில் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். கேட்டால், தயக்கமில்லாமல் நாம் கூறுவோம் ''சே''யின் வழியில் அவர்கள் கற்றுக் கொள்ளட்டும். நமது காலகட்டத்தைச் சார்ந்திராத ஒரு மனிதனின் முன்மாதிரி வேண்டும் என்றால், வருங்காலத்தைச் சேர்ந்த ஒரு முன் உதாரணம் வேண்டுமென்றால் நான் என் இதயத்தின் அடித்தளத்தில் இருந்து கூறுவேன் செயலிலோ நடத்தையிலோ மாசு மறுவற்று விளங்கிய அம்மாமனிதன் ''சே'' என்று; நமது குழந்தைகள் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம் என்பதை விபரிக்க வேண்டியிருந்தால் புடம் போடப்பட்ட புரட்சிவாதி என்ற முறையில் நமது இதயத்திலிருந்து கூறுவோம் ''சே'' போல அவர்கள் இருக்கட்டும்.

எல்லோருக்குமாக வாழ்ந்த இந்தப் பெரும் மனிதன்; ஒடுக்கப்பட்ட ஏழை மக்களுக்கு நிழல் கொடுத்து பெருவிருட்சமாக நிமிர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற போது 1967 ஒக்டோபர் ஒன்பதாம் நாள் அவனது 39 வயதில் அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ (C I.A) தீட்டிய 'ஒப்ரேசன் சிந்தியா'' திட்டத்தின் மூலம் சரிதது வீழ்த்தப்பட்டது. கியூபாவின் விடுதலைக்காகப் போராடி அங்கிருந்து அமெரிக்காவின் கைக்கூலிகளை விரட்டிவிடுதலையைப் பெற்றுக் கொடுத்து விட்டு 1967இல்பொலிவிய தேசிய விடுதலை இராணுவத்தை தலைமையேற்று பொலிவியாவின் விடுதலைக்காகப் புரட்சி செய்த போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் அவன் சாகடிக்கப்பட்டான். என்றாலும்... அடிமை மக்களுக்காக ''சே'' பொலிவியாவில் விட்ட இறுதி மூச்சு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை மட்டுமல்லாது உலகின் எல்லா ஒடுக்குமுறை அரசுகளின் மனச்சாட்சியையும் சுட்டெரிக்கும் அக்கினிக் காற்றாக என்றென்றும் வீசிக் கொண்டே இருக்கும்

அ. பார்த்தீபன்.

---

நான் பள்ளிச் சிறுவனாக இருந்த போது 1958ஆம் ஆண்டின் இனக் கலவரங்களில் நிகழ்ந்த பயங்கரச் சம்பவங்கள் என் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தின. சிங்கள இனவெறியர்களால் எம்மக்கள் ஈவிரக்கமில்லாது குரூரமாகக் கொல்லப்பட்ட, நெஞ்சை உலுக்கும் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். எங்கள் குடும்பத்திற்குத் தெரிந்த ஒரு விதவைத் தாயை நான் ஒருமுறை சந்தித்தபோது அவர் இந்த இனவெறியாட்டத்தால் தனக்கு நேர்ந்த துயரமான அனுபவத்தை என்னிடம் சொன்னார். இனக் கலவரத்தின் போது சிங்களக் காடையர்கள் கொழும்பிலிருந்த அவர் வீட்டைத் தாக்கினார்கள். அவரதுவீட்டுக்குத் தீவைத்து, அவரது கணவரையும் குரூரமாகக் கொலை செய்தனர். அவரும் அவரது பிள்ளைகளும் பலத்த எரிகாயங்களுடன் தப்பினார்கள். அவரது உடலில்காணப்பட்ட எரிகாயத் தழும்புகளைப் பார்த்த போது நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். சிறு குழந்தைகளைக் கொதிக்கும் தாருக்குள் உயிருடன் வீசிக் கொன்ற கோரச் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். அநாதரவான அப்பாவித் தமிழர்கள் எவ்வாறெல்லாம் கொடூரமான தாக்குதலுக்கு இலக்காகினர். என்பதையெல்லாம் கேட்கும் போது என் மக்கள் மீது ஆழ்ந்த அனுதாபமும், அன்பும் ஏற்பட்டன இந்த இனவெறி அமைப்பின் பிடிக்குள்ளிருந்து எம்மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்ற பெரும் உந்துதல் என்னிடம் தோன்றியது. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுதவலிமையைப் பிரயோகிக்கும் இந்த அமைப்பினை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும் என் நான் ஆழமாக உணர்ந்தேன்.'

தமிழீழத் தேசியத் தலைவர்
வே. பிரபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான

★ நினைவுகள், தமது மூளையில் மின்சாரப் பகுதிகளாகவும், இரசாயனப் பகுதிகளாகவும் பதிய வைக்கப்பட்டுள்ளன. முன்னது சமீப காலநினைவிற்கும், பின்னது பழங்கால நினைவிற்கும்பதிய உதவுகிறது. வயதாகஆக மின்சாரப் பகுதி பதிவுகளின் திறன் குறைந்து ஞாபக மறதி ஏற்படுகிறது. வயதானவர்க்கு பழைய நினைவுகள் இருந்தும், நேற்று இன்று நடந்த நிகழ்ச்சிகளை மறப்பதற்கு இதுவே காரணமாகும்.

★ அசோக மரத்தைப் பெண்கள் காலால் உதைத்தால் உடனே அது நன்கு பூக்கத் தொடங்கும் என்று பழைய சமஸ்கிருத இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ளது. உண்மையில் ஒன்பது மீற்றருக்கு மேல் வளர்ந்து விட்ட மரங்களின் அடிப்பாகத்திலேயே தண்ணீர் தங்கிவிடும். இதனால் மேற்பகுதிக்கு தண்ணீர் சரிவரச் செல்லாமல் மரம் பூக்காது. இப்படிக்காலால் அடிப்பாகத்தை உதைப்பதால் மரம் அதிர்ந்து, கீழே தங்கிவிட்ட தண்ணீர் மேலேபாயும். உடனே மரங்களின் வேர்ப்பாகத்தில் இருந்து நீர் உச்சி வரை பாயும்,பூக்களும் பூக்கும், இதுவே உண்மை.

★ நம் உடலில்உள்ள மெலனின் என்னும் பொருள் தோலுக்கு நிறத்தை அளிக்கிறது. சூரிய ஒளி பட்டால் இது அதிகமாகி தோலின் நிறம் கறுக்கிறது- இதனால் வெள்ளையர் வெள்ளையாகவும் ஆபிரிக்கர் மற்றும் இந்தியர் தோல்கறுப்பு நிறமாகவும் உள்ளது. தோலின் நிறம் கறுப்பாக இருப்பது நமக்கு புற்றுநோய் வராமல் இருக்க உதவுகிறது. ஐரோப்பியர் வெயில் அதிகமாகவுள்ள ஆஸ்திரேலியா கண்டத்திற்கு குடியேறிய பிறகுதோல் புற்றுநோய் அதிகரிப்பது கண்டறியப்பட்டுள்ளது.

★ 1976 இல் நோர்வே நாட்டு விஞ்ஞானிகள் நடத்திய ஒருசோதனையின் போது சிவப்புநிற அறையில் இருந்தவர்கள் கதகதப்பாகவும், நீல நிற அறையில் இருந்தவர்கள் குளிராகவும் இருப்பதாகவும் உணர்ந்தார்கள். உண்மையில் இரண்டு அறைகளும் ஒரேவெப்ப நிலையையே கொண்டிருந்தன. நாம் வண்ணங்களை கண்களால் பார்ப்பதோடு உடலின் மற்றப் புலன்களாலும் உணர்கின்றோம். சிவப்பு நிறம் எமது இதயத் துடிப்பையும், மூச்சுவிடுதலையும் விரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுதுகள்

வுபடுத்துகிறது. நீல நிறம் இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது. ஒரேஞ்நிறம்பசியைத்தூண்டுகிறது. மஞ்சள் நிறம் திரவத்தை பெருக்குகின்றது. பச்சை, நீலம் போன்றவை குளிர்ந்த நிறங்கள். அவை நம்மை அமைதிப்படுத்தி தளரச் செய்கிறது.

★ இறப்பர் மரங்களின் இலைகள் உதிரும் காலங்களில் இறப்பர் மரத்தில் பால் எடுப்பதை தற்காலிகமாக நிறுத்தப்படுவதற்கான காரணம் இலைகள் உதிரும் பொழுது ஒளித் தொகுப்புகுறைவடைவதால் பால் தயாரிக்கும் வீதம் குறைவடையும், இலைகள்உதிரும் போது ஆவியுயிர்ப்பு குறைவதால் நிலத்தில் இருந்து நீரும் கனியுப்புக்களும் உறிஞ்சப்படுதல் குறையும். இதனால் பால் தயாரிக்கும் வீதம் குறைவடையும். உணவு தயாரித்தல் நடைபெறாதபோது பால் எடுப்பது மரத்திற்கு நல்லதல்ல.

★ மின்மினிப் பூச்சி என்பது சிறகுகளைக் கொண்ட ஒரு வகையான பறக்கும் புழு. இதன் அடிவயிற்றில் உள்ள ஒளியை உற்பத்தி செய்யும் உறுப்பு நரம்புத் தொகுதியினால் இயங்கும். இவ்வுறுப்பில் லூசிபெரின் (Luciferin) லூசிபெரோஸ் (Luci-frase) என்ற இரு வகையான பதார்த்தங்கள் உள்ளன. லூசிபெரின் வளியிலுள்ள ஒட்சிசனுடன் சேரும் போது ஒளிஉண்டாகிறது. இவ்வாறு லூசிபெரின் ஒட்சிசனுடன் சேருவதை லூசிபெரோஸ் ஊக்குவிக்கிறது. இதனாலேயே, மின்மினிப் பூச்சி மின்னிமின்னி ஒளிர்கிறது. இவ்வொளி வெப்பத்தைத் தராததால் இத்தகைய வெப்பமின்றி ஒளியை மட்டும் தரும் செயற்பாடு ''பயோலூமின் சென்ஸ்'' (Bio-Lumi nesence) எனப்படும்.

★ நாம் சந்திப்பவர்களில் ஒரு சிலர் இடது கைப்பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்கள் பயப்படுவது போல் இவ் இடது கைப் பழக்கத்தால் ஆபத்தில்லை. இது ஏன் ஏற்படுகிறது என்பதற்குச் சரியான காரணம் இன்னும் தெரியவில்லை. இருப்பினும், இப்போது நம்பப்படுகின்ற காரணம் இது தான்; மூளையில் வலது பாகம், இடதுபாகம் என்று இரண்டு பாகங்கள் உண்டு. இவை இரண்டுமே வெவ்வேறு செயல்களைக் கவனிக்கின்றன. மூளையிலிருந்துவரும் செய்திகள் கழுத்தருகில் தடம் மாறுகின்றன. ஒரு 'X'' குறி போல மூளையின் இடது பக்கச் செய்திகள் உடலின் வலது பக்கத்திற்கும் மூளையின் வலதுபக்கச் செய்திகள் உடலின் இடது பக்கத்திற்கும்செல்கின்றன. படிப்பது, எழுவது, பேசுவது,வேலை செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது போன்ற செயல்களை மூளையின் இடதுபாகம் தான் கவனிக்கிறது. அதனால் தான் நம்மில் பெரும்பாலோர் வலது கைப்பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறோம். விதிவிலக்காகசிலருக்கு மூளையின் வலது பாகத்திலிருந்து படிப்பது, எழுதுவது, வேலைகள் செய்வது போன்றசெயல்களுக்கு ஆணைகள் பிறக்கின்றன. இதனால் தான் இவர்களுக்கு இடது கைப்பழக்கம் ஏற்படுகிறது. உலகில் உள்ள மொத்த மக்கள் தொகையில் சுமார் நான்கு சதவீதம் பேர் இடது கைப்பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

★ பருவ காலங்கள் மாறும் போது நம் உடலில் நோய்கள் வருவதற்குக் காரணம் என்னவெனில் பருவ காலங்கள் மாறும் போது நோய்க்கிருமிகள் வளர்ச்சிபெறுவதற்கு உகந்த சூழ்நிலைகள் அமைகின்றன. அத்துடன் அந்தக்கிருமிகள் பரவுவதற்கான ஊடகங்களும் அந்தச்சமயங்களில் பெரிதும் உதவுகின்றன. எடுத்துக் காட்டாக, மழைக்காலங்களில் நிலவும்குளிர்ச்சியான சீதோஷ்ணநிலையில்பலவகைப் பக்ரீரியாக் கிருமிகள் பல்கிப் பெருகும் குணமுள்ளவை. மேலும் மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கு ஈக்களின் பெருக்கம், கொசுக்களின் ஆதிக்கம் போன்றவற்றால் கிருமிகள் ஓரிடத்தில் இருந்து வேறொரு இடத்திற்கு எளிதில் பரவி விடுகின்றன. இதனால் நோய்களும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு இலகுவாகப் பரவி விடும். மழைக்காலங்களில் கொலரா, வயிற்றுப்போக்கு, சீதபேதி, மஞ்சள்காமாலை, மலேரியா போன்ற நோய்கள் வெகுவாகப் பரவுவது இப்படித்தான். இதேமாதிரி கோடை காலங்களில் நிலவும் உஷ்ணமான தட்பவெப்ப நிலையிலும் சில வகைக்கிருமிகள் வளரும் வாய்ப்புப் பெறுகின்றன. "டெடனஸ்" போன்றகிருமிகள் வெப்பத்தால் அழிந்து விடாதபடி பாதுகாப்பு உறைகொண்ட டெடனஸ் சிதல்களாக(Tetanus Spores) உருமாறிக்கொண்டு காற்றின் மூலம் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பரவுகின்றன. இப்படி மழை, நீர், வெயில், காற்று, ஈக்கள், கொசுக்கள் போன்ற ஊடகங்கள் பருவகாலங்களில் கிருமிகள் பரவுவதற்கு உதவுவதால் தான் அச்சமயங்களில் நமக்கு நோய்கள் வருகின்றன.

★ இறந்து போன உடலை நாம் தூக்கும் போது அதிகமாகக் கனக்கும். ஆனால் உண்மையில் இறந்து போன உடல் கனப்பதில்லை, கனக்கிறமாதிரி தெரியும்; அவ்வளவுதான். அதற்குக் காரணம் இருக்கிறது. சாதாரணமாக உயிரோடு இருக்கும் போது உடல் தசைகள் எல்லாமே தளர்வாக இருக்கும் அதனால் உடல் கனமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத் தெரியாது. ஆனால் இறந்து போன இரண்டு மணி நேரத்தில் உடல் தசைகள் அனைத்தும் சுருங்கி ஒருவிதமான விறைப்புத் தன்மையை (Rigor Mortis) ஏற்படுத்தி விடும். இதனால் இறந்தவரின் உடல் கனப்பதாகத் தெரியும். இதற்கு ஓர் உதாரணம் உங்கள், நண்பர் சாதாரணமாக கையை வைத்திருக்கும் போது, அவர் கையை நீங்கள் மேலே தூக்குங்கள் மிக எளிதாக தூக்கிவிடுவீர்கள். சரி, இப்போது நண்பரின் கையை விறைப்பாக வைத்துக் கொள்ளச் சொல்லுங்கள்; இனி அவருடைய கையை மேலே தூக்கிப் பாருங்கள், கனமாகத் தெரியும்; கையைத் தூக்குவதும் கடினமாக இருக்கும்.

★ நாம் வேகமாக ஓடும் போது மூச்சிரைக்கக் காரணம் என்ன வென்றால் வேகமாக ஓடும்போது உடல் தசைகள் குறிப்பாக கை கால்கள் வழக்கத்தைவிட அதிகமாக இயங்குகின்றன. அந்த அதிக இயக்கத்திற்கு, சாதாரணமாகத் தேவைப்படும் அளவை விட மிக அதிகளவில் ஒட்சிசன் தேவைப்படுகிறது. நாம் அதைப் பெறுவதற்கு வேகமாக மூச்சு விடுகிறோம். இதனால் உள்மூச்சின் அளவு (Inspiration) அதிகமாகிறது. என்றாலும், நுரையீரலில் குறிப்பிட்ட அளவுக்குமேல் காற்று தங்க முடிவதில்லை. இதனால் அளவுமீறிய உள்மூச்சை வெளியேற்ற வெளிமூச்சின் அளவு (Expiration) அதிகரிக்கிறது. ஆக, நாம் ஓடும் போது, இந்த உள்மூச்சும், வெளிமூச்சும் மிகவேகமாக நடப்பதால் நமக்குமூச்சிரைக்கிறது.

## விடைகள்

01. 39.

02. 2 மணிநேரம்.

03. கயிறு கட்டையில் கட்டப்படாததினால் மாடு எவ்வளவு தூரமும் மேயும்.

04. கிடங்கிலிருந்து மண் எடுக்க முடியாது.

05. கடல்நீர் மட்டம் நூலேணியில் எந்தப்படிகளையும் மூழ்கடிக்காது. கப்பல் கடல் நீரில் மிதக்கிறது. அலைகளினால் நீர் மட்டம் உயரும் போது கப்பலும் அதன் மேலாகத்தான் மிதக்கும். அத்துடன் இணைந்துள்ள நூலேணியும் கப்பலோடு மேலே போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிகால இலங்கைத்

ஒரு இனத்தின் வரலாறானது அவ்வினம் தொடர்பாகக் கிடைக்கும் பல்வேறு சான்றுகளின் அடிப்படையிலிருந்து கட்டி எழுப்பப்படவேண்டிய தொன்றாகும். இதிலே பழைய மரபுகள், வரலாற்றுக் கதைகள், ஐதீகங்கள் என்பன கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும். அதேவேளை புதிய தரவுகளையும், விஞ்ஞான பூர்வமான முடிவுகளையும் வரலாற்று ஆய்வில் முக்கியப்படுத்திக்கொள்வது அவசியமாகும். இந்த அடிப்படையில் இலங்கையின் ஆதிகால தமிழர் வரலாறு பற்றிய பாரம்பரிய கருத்துக்களை நோக்குகின்ற போது அவை மறு பரிசீலனை செய்யப்படவேண்டியதொன்றாகவே தென்படுகின்றன. இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றிக் கூற வெழுந்த முதல் பாளி இலக்கியமான மகாவம்சம் ஆதியில் இங்கு வாழ்ந்தவர்கள் நாகரீகமற்ற "இயக்கர், நாகர்" எனவும் பின்னர் சிங்கள மக்களின் மூதாதையினரான ஆரியர் (விஜயன் குழுவினர்) வட இந்தியாவிலிருந்து குடியேறினர் எனவும், தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து பிற் காலத்தில் அவ்வப்போது படையெடுப்பாளராக வந்து குடியேறிய சிறு பிரிவினர் எனவும், கூறுகிறது. மகாவம்சத்தின் இக் கூற்றை உண்மையென ஏற்றுக் கொண்ட வரலாற்று அறிஞர்கள் பலர் இலங்கையின் நாகரீக வரலாறு சிங்கள மக்களின் வருகையோடு ஏற்பட்டதெனவும், தமிழர்கள் இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்குமிடையே இருந்த அரசியல், வர்த்தக தொடர்பால் முக்கிய நகரங்களிலும், துறைமுகங்களிலும் வந்து குடியேறிய சிறுபிரிவினர் எனவும் விளக்கமளித்துள்ளனர். அதாவது இரு இன மக்களையும் இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள் எனக் கூறும் இவர்கள் சிங்கள மக்களின் வரலாற்றை இந்த நாட்டோடு தொடர்புபடுத்திக் கூறும் போது இங்கிருந்த தமிழர்களினால் ஏற்பட்ட சனத்தொகைப் பெருக்கம், பண்பாட்டு அபிவிருத்தி என்பவற்றை மனக்கருத்தில் கொள்ளாது அவர்களுடைய வரலாற்றை தென்னிந்தியாவுடன் இணைத்துப் பார்ப்பதிலேயே அதிக கவனம் செலுத்தினர். ஆனால், சமீப காலமாக இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் தொல்லியல், மானுடவியல் சமூகவியல் போன்ற ஆய்வுகள் மகாவம்சம் கூறுவது போல் சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவிலிருந்து குடியேறவில்லையென்பதையும், இரு இன மக்களின் மூதாதையினரும் ஏதோ ஒரு காலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து குடியேறினர் என்பதையும், காலப்போக்கில் இம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வரலாறு

- ப. புஷ்பரட்ணம்

மக்கள் மொழி ரீதியாகப் பிரிந்து இரு இன மக்களாக இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றன. இம் முடிவுகளை அடிப்படையாக வைத்தே ஆதிகால இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய சில கருத்துக்கள், இக் கட்டுரையில் ஆராயப்படுகிறது.

## ஆதிக்குடிகள்

இலங்கையில் இதுவரை அறியப்பட்டுள்ள தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில், இங்கு வாழ்ந்த காலத்தால் முந்திய மக்கள் இடைக்கற்கால பண்பாட்டிற்கு உரியவர்களென, அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இம் மக்கள் மலைநாடு தொட்டு தாழ்நிலப்பகுதி வரையுள்ள நீர்நிலைகளையும் கடற்கரைப் பகுதிகளையும் அண்டி ஓரளவு செறிவாக வாழ்ந்துள்ளனர் என்பதை இரத்தினபுரி, பலாங்கொடை, கித்துள்கொட, அனுராதபுரம், முல்லைத்தீவு, திருகோணமலை, மாங்குளம், மாதோட்டம், பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இப் பண்பாட்டு மக்களிற்கும் தமிழ்நாடு - திருநெல்வேலி, தேரி (மணற் குன்றுகள்) கலாச்சாரமக்களுக்குமிடையே மொழி, இனம், ஆயுதத்தொழில் நுட்பம் என்பனவற்றில் அதிக ஒற்றுமை காணப்படுகிறது. இலங்கையில் இப் பண்பாட்டின் தோற்றம் கி. மு28,000 ஆண்டுகள் எனவும், தமிழ்நாட்டில் இது கி. மு 30,000 ஆண்டுகள் எனவும் சீ-14 காலக்கணிப்பு மூலம் அறியப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் ஆதிகால மக்கள் தமிழ்நாட்டிலிருந்தே புலம்பெயர்ந்திருக்கலாமென தொல்லியலாளர் கருதுகின்றனர். மகாவம்சம் கூறும் இயக்கர் நாகர் இப் பண்பாட்டு மக்கள் எனக்கருதும் மானுடவியலாளர் இவர்களை தென்னிந்தியாவில் வாழ்ந்த ஆதி'ஒஸ்ரலோயிட்' இனவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறுகின்றனர்.

இப் பண்பாட்டு மக்களைத் தொடர்ந்து பெருங்கற்கால பண்பாட்டிற்கு உரிய திராவிட மக்கள் கி. மு 1000 இல் இருந்து வாழ்ந்ததற்கான தடயங்கள், இலங்கையின் பல்வேறு பாகங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பொம்பரிப்பு (புத்தளம்) மாந்தை, அனுராதபுரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா, திசமாறகம, கதிர வெளி (மட்டக்களப்பு), கந்த ரோடை' வல்லிபுரம், ஆனைக் கோட்டை, பூநகரி ஆகிய இடங் கள் இப்பண்பாட்டின் முக்கிய மையங்களாகக்கருதப்படுகின்றன. பெருங்கற்காலப் பண்பாடு என் பது, திராவிட மக்கள் இறந்த வர்களை அடக்கம் செய்வதிற் பின்பற்றிய ஒரு பண்பாட்டு அம் சத்தைக் குறிப்பதாகும். இவ் அடக்குமுறை நாட்டின் பௌதீ கத் தன்மைக்கு ஏற்ப பெரிய கற்களையும், தாழிகளையும் பயன்படுத்திப் பல்வேறு வடிவங் களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மேற்கூறப்பட்ட மையங் களிற் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன, இவ் வடக்க முறையில், இறந்தவர் கள் வாழ்ந்த காலத்தில் பயன் படுத்திய பல பொருட்களையும் சேர்த்து அடக்கம் செய்யப்பட் டுள்ளதனால் இவை பற்றிய ஆய் வானது அக்கால மக்களது பண் பாடு பற்றிய ஆய்வாக அமைகிறது. இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் இப்பண் பாட்டுடன்தான் அரசதோற்றம், நீர்ப்பாசனத்துடன் கூடிய விவ சாயம், இரும்பின் உபயோகம், கறுப்புச் சிவப்பு மட்பாண்டப் பயன்பாடு என்பன தோற்றம் பெற்றுள்ளன. இலங்கையிற் பர வலாக்க கண்டுபிடிக்கப்பட்டுள்ள இப் பண்பாடு பற்றிய சான்று கள் இலங்கையின் நாகரீக வர லாறும் சிங்கள மக்களின் மூதா தையினரும் வட இந்தியத் தொடர்பால் ஏற்பட்டதென்ற பாரம்பரிய கருத்தை முற்றாக நிராகரித்துள்ளனர். இப் பண் பாடு தொல்லியல், மானுட வியல், சமூகவியல் ரீதியாகத் தென்னிந்தியாவுடன் சிறப்பாகத் தமிழ்நாட்டுடன் நெருக்கிய ஒற் றுமைத்தன்மையை கொண்டுள் ளது. அதிலும் ஆதிச்ச நல்லூ ருக்கு எதிரே அமைந்த மாந்தை யும், அரிக்க மேட்டிற்கு எதிரே அமைந்த பொம்பரிப்பும் ஒரே பிராந்தியம் எனக் கூறக்கூடிய அளவுக்கு, இப் பண்பாட்டில் அதிக ஒற்றுமை இருப்பதாகத் தொல்லியலாளர் கூறுகின்றனர். இதனால் இடைக் கற்கால பண் பாட்டைப் போல் இப் பண் பாடும் பெருமளவுக்குத் தமிழ்நாட் டிலிருந்து பரவியதாக கருத இட முண்டு. தென்னிந்தியாவில் இப் பண்பாடு தோற்றம் பெற பெரும ளவுக்கு இப் பண்பாட்டை பின் பற்றியிருந்த மத்திய தரைப் பிரதேச மக்களின் புலப்பெயர்ச்சி காரணமென, நீண்டகாலமாகக் கூறப்பட்டு வந்தது, ஆனால் அண்மைக்காலங்களில் இக்கருத்து பெருமளவிற்கு நிராகரிக்கப்பட்டு இருநாடுகளிக்குமிடையே நிலவிய வர்த்தக கலாசாரத் தொடர் பினால் தென்னிந்தியாவில் வாழ்ந்த புதிய கற்கால மக்களே இந்நாடுகளிடமிருந்து இவற்றைக் கற்று பின்னர் பெருங்கற்கால கலாச்சாரத்தை வளர்த்தெடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவினர் என கூறப்படுகிறது. இக் கருத்தையே அறிஞர்பலரும் இன்று ஏற்றுள்ளனர். இலங்கையில் இப்பண்பாட்டிற்குரிய சின்னங்கள் பல இடங்களில் இடைக்கற்கால பண்பாட்டுச் சின்னங்களின் மேற்படையில் காணப்பட்டாலும், வேறுபல இடங்களில் புதிய குடியேற்றத்தின் ஆரம்பச் சின்னங்களாக காணப்படுகின்றன. இதனால் இலங்கையில் இப்பண்பாடு பரவ திராவிட மக்களது புலப்பெயர்ச்சியை ஒரு காரணமாகக் கொள்ளும் அதே வேளை, இருநாடுகளுக்கும் இடையிலான பண்பாட்டுத் தொடர்பையும் ஒரு காரணமாகக் கொள்ள வேண்டியுள்ளது.

### பல மொழிபண்பாட்டின் தோற்றம்

தென்னாசியாவிற் பெருங் கற்கால பண்பாடு பற்றிய சான்றுகள் பரவலாக் காணப்பட்டாலும், அது திராவிட மொழி பேசும் பிராந்தியமான தென்னிந்தியாவில் சில தனித்துவமான அம்சங்களுடன் வளர்ச்சியடைந்ததொன்றாகும். இங்கு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற வேறுபாடுடைய மொழிப் பண்பாடுகள் தோற்றம் பெற பண்பாடே அத்திவாரமாக இருந்துள்ளது. இது போல் இலங்கையிலும் தமிழ், சிங்களப் பண்பாட்டின் தோற்றம் இப்பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் ஏற்பட்டதாகத் தொல்லியளாளர் கூறுகின்றனர். தமிழ்நாட்டில் ஆதித் திராவிட அடிப்படையிலிருந்து தமிழ் மொழி செம்மைப்படுத்தப் பட்டுச் சங்க இலக்கியம் படைக்கும் அளவுக்கு இம் மொழி பெருங்கற்கால பண்பாட்டின் முதிர்ச்சி நிலையிலே தோன்றியதாக, அறிஞர் கூறுவர். இதனால் தான் தென்னிந்தியாவில் தொன்மையான இலக்கிய வரலாறு கொண்ட நாடு என்ற சிறப்பு தமிழ் நாட்டிற்கு உண்டு. இதை மேலும் உறுதிப்படுத்துவதில் பெருங் கற்காலப் பண்பாட்டு மையங்களில் இருந்து கிடைத்த சாசனங்கள் சான்றாக அமைகின்றன. தென்னாசியாவிற் எழுத்துக்களின் தோற்றக் காலத்தை யிட்டு முரண்பட்ட கருத்துக்கள் நிலவினாலும் கி.மு 3ஆம் நூற்றாண்டளவில் அசோகன் ஆட்சியுடன் பிராமி என்ற வரிவடிவம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதற்கும் போதிய சான்றுகள் உண்டு. இதைஅசோக பிராமி வடபிராமி எனவும் அறிஞர் அழைத்துள்ளனர். இதையொத்த வரிவடிவங்கள் சமகாலத்தில் தமிழ் நாட்டில் பயன்படுத்தப்பட்டிருந்தலும் அசோக பிராமியில் காணப்படாத தமிழுக்கே சிறப்பான இ, ம, ழ, ற, ன, ள, போன்ற எழுத்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. இவை தமிழ்ப் பிராமி எனவும், திராவிடி எனவும் அழைக்கப்படுகிறன. இச் சாசனங்களை முதலில் வாசித்த வெங்கோபராவ், கிருஷ்ணராவ், ராவ்வாகிப் போன்ற அறிஞர்கள் இந்தியாவின் ஏனைய பிராந்தியங்களைப் போல் இச்சானங்களும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டதாகக்கூறினர். இவர்களைத் தொடர்ந்து ஆய்வு செய்த சுப்பிரமணிய ஐயர் இச் சாசனங்களிற் பல தமிழ்ப் பெயர்கள் இருப்பதைக் கொண்டு இவை தமிழ் மொழியிற் பிராகிருதச் சொற்கள் கலந்து எழுதப்பட்டன எனக் கூறினார். 1968 இல் புகளூர் கல்வெட்டுக்களை ஆராய்ந்த ஐராவதம் மகாதேவன் அவர்கள் கல்வெட்டிலுள்ள தமிழ் மொழியின் சிறப்பை மிக விரிவாக எடுத்துக்கூறியதுடன், சங்க இலக்கியத்தில் வரும் சில வரலாற்றுச் செய்திகளை இக்கல்வெட்டிலிருந்து எடுத்துக் காட்டியுள்ளார். இச்சான்றுகள் கி.மு 3 ஆம் நூற்றாண்டிற்கு முன்பாகவே தமிழ் நாடு (இன்றைய கேரளம் உட்பட) மொழி ரீதியாகத் தனியொரு பிராந்தியமாக விளங்கியதென்பதை, எடுத்துக்காட்டுகின்றன.

(தொடரும்)

நன்றி
தமிழீழ நோக்கு

அழகிற்கு ஓர் அழகு செய்ய

அனுசியா நகையகம்

நல்லவர்களின் நம்பிக்கைக்குரிய நகைமாடம்
நல்லவைகளையே நாளும் தரும் நகைமாடம்
நீங்கள் நாட வேண்டிய நகைமாடம்

அனுசியா நகைமாடம்

துணுக்காய்ச்சாலை, மல்லாவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பறைப் பக்கம்

# கறுத்தாலும் கவசம்

'என்னடா மோகன் இப்படிக் கறுத்துப் போய் வாறாய்? என்ன வெய்யிலுக்கால கனதூரம் போயிட்டு வாறாய் போல இருக்கு?' என்று கேட்டன்.

'இன்றைக்கு நாலு ஐந்து பேர் கேட்டுட்டாங்கள். யாழ்ப்பாணம் போறதுக்குள்ள கரியனாப் போயிடுவன் போல கிடக்கு.'

'அது ரெண்டு நாளில பழைய நிறத்திற்கு வந்திடும். ஏன் வெயில்ல போனாத் தோல் நிறம் மாறும் எண்டு தெரியுமோ? தெரிஞ்சா நீ இதைக் கதைக்க மாட்டாய்'

'சூரிய வெளிச்சத்தில இருக்கிறபுற ஊதாக் கதிர் எங்கட உடம்பின் தோல்ல இருக்கின்ற 'ஹிஸ்டிடின் என்ற இரசாயனப் பொருளை வேற ஒரு இரசாயனப் பொருளா மாற்றுது. இது இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்யும். இதால தான் தோல் சிவப்பா மாறுது. தொடர்ந்து நாங்க வெயில்ல நிற்பம் என்றால் தோல்ல இருக்கிற மற்றொரு இரசாயனப் பொருளான 'தைரோசின்' என்ற பொருளை அந்த புற ஊதாக் கதிர்கள் 'மெலினின் நிறப் பொருள்' என்ற ஒரு பழுப்பு நிறப் பொருளா மாற்றுது. இது தான் தோல் கறுப்பு நிறமாகக் காரணம்.

ஆனால் இது நன்மைக்காகத் தான் அப்படியெல்லாம் நடக்குது: இது தோலின் மேல் அடுக்குகளில் பரவுவதால தோல் பாதுகாக்கப் படுகிறது.

அதோட இந்தப் புறஊதாக் கதிர்கள் உடம்புல இருக்கிற நோய்க் கிருமிகளையும் கொல்லிறதோட, கிருமிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கும் கலங்களையும் தூண்டி விடுகிறது. நரம்பு மண்டலமும் சுறுசுறுப்படையிது. அதோட 'விட்டமின் D' யையும் உற்பத்தி செய்யிது. அதான் சின்னக் குழந்தைகளை காலையில வெயில்ல கொஞ்ச நேரம் கிடத்திறவங்கள் பாத்திருப்பியே. ஆனால் அதிக வெயிலும் உடம்புக்குக் கூடாது' என்று நான் அறிவியல் புத்தகத்தில படிச்சதைச் சொன்னான் அதுக்கு அவன்

'அப்ப இனி வாழ்க்கையில பெரிய பிரச்சனை தீர்ந்திது. இந்தக் கிணத்தில அள்ளிக் குளிக்கிறதெண்டா எனக்கு பெரிய பிரச்சினை மச்சான். என்ன செய்யிறது. ஊத்தையால கிருமி பிடிச்சிடுமோ எண்டதால கஷ்டப்பட்டு மனமில்லாமல் குளிக்கிறனான். இனிமேல் பள்ளிக்கூடத்தில 'சேர்' வெய்யில்ல பிடிச்சு விடுவாரே, அந்த வெய்யிலே போதும் என்ர கிருமிக்கு'.

இதுக்கு நான் என்ன செய்ய இப்படியும் சில விளப்பம் கெட்டதுகள், எங்கட வகுப்பில இருக்குதுகள்.

-வீணன்

நோயற்ற வாழ்வு தான் குறைவற்ற செல்வம்.
தரக்குறைவான மருந்துகளும், காலாவதியான பால்மா வகைகளும் உங்கள் சுகமான வாழ்விற்கு தீங்கு பயக்கும்.
இதற்குப் பாதுகாப்பான இடம்

மாருதி மருந்து பால்மா

696, துணுக்காய் சாலை,
மல்லாவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமை உங்கள் கையில்

குறிப்பிட்ட பருவத்தில் திறமைகள் வெளிப்பட துடிக்கின்றன. மாணவர்களின் பருவம் இளமைப் பருவம் ஆதலால் உணர்ச்சி உத்வேகத்தில் அவர்கள் இருக்கிறார்கள். உணர்ச்சிகளை எப்படியும் வெளிப்படுத்திவிட வேண்டுமென அவர்கள் துடிக்கிறார்கள். சரியான மார்க்கங்கள் அவர்களுக்கு கிடைக்காத போது தவறான வழிகளில் செலுத்தவும் அவர்கள் தயக்கம் காட்டுவதில்லை. ஏதோ ஒரு வழியில் அவர்களுடைய உணர்ச்சி வெளிப்பட வேண்டி இருக்கிறது. அதை வெளிப்படுத்த அவர்கள் துடிக்கிறார்கள்.

குறிப்பாக மாணவ கிளர்ச்சிகள் என்று சொல்லப்படுபவை எல்லாம் இப்படி ஏற்படுகின்ற கிளர்ச்சிகளே. இளமைப் பிராயத்தில் மாணவர்கள் அங்கீகாரத்துக்காகத் துடிக்கிறார்கள். தன்னிலை மற்றவர்கள் கவனிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இதற்கு சரியான வழி வகைகள் கிடைக்காத போது அவர்களாகவே சில பல வழிகளை ஏற்படுத்திக் கொண்டு செயல்படுகிறார்கள். இவைகளே மாணவர் போராட்டங்களாக வெடிக்கின்றன.

ஒரு கணம் யோசிப்போம். மற்றவர்கள் மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பது ஒரு புறம் இருக்கட்டும். மாணவர்கள் தாங்களாகவே இது பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டாமா? கிளர்ச்சிகள் மாணவர்களை மற்றவர்களின் கவனத்திற்கு கொண்டு வரலாமே தவிர அவருடைய திறமைக்கு அங்கீகாரத்தை ஒரு போதும் அளிக்க முடியாது.

ஓட்டப்பந்தயம், விளையாட்டுப் போட்டிகள், மேடைப் பேச்சு, கட்டுரை எழுதுதல், ஓவியம் தீட்டுதல் ஆகிய எத்தனையோ வழிகளில் மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திக் கொள்ள முடியும். இவற்றில் ஏதோ ஒரு துறையில் அவர்கள் பிற்காலத்தில் வல்லுனர்களாகவும் ஆகமுடியும்.

இதை மனதில் கொண்டு அவர்கள் செயற்ப்பட்டால் தங்கள் திறமைகளை ஆக்கபூர்வமான வழிகளில் செலுத்தத் தொடங்கி விடுவார்கள்.

எந்த ஒரு துறையில் ஏற்படுகின்ற வளர்ச்சியும் முன்னேற்றத்திற்கு வழிகாட்டவே செய்கின்றது. மாணவர்கள் பெரும்பாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவப் பருவத்தில் இதில் கவனம் செலுத்த தவறுவதால் திறமை இருந்தும் பராமரிக்க முடியாதவர்களாக ஆகி விடுகி றார்கள். கல்விக் கூடங்களும், ஆசிரியர்களும் இந்த விஷயத்தில் மாணவர்களுக்கு முழுமையாக வழிகாட்டத் தவறினால் கூட மாணவர்கள் தங்களது எதிர் காலத்தை மனதில் கொண்டு திற மைகளை வளர்த்துக் கொள் ளுதல் அவசியம்.

மனிதனுடைய திறமை என்பது சற்று விசித்திரமானது. விதைக்குள் அடங்கி இருக்கும் கருவைப் போன்றது. விதைக்குள் கரு இருப்பதாலேயே அது வளர் ந்து செடியாகி விடுவதில்லை. சரியான நிலத்தில் அது விதைக்க ப்பட வேண்டும். அது விதைக்க ப்பட்ட மண் வளமுள்ளதாக இருக்க வேண்டும். ஈரப்பசை இல்லாமல் விதை முளைக்காது. தக்க சீதோஷ்ண நிலையும் வேண்டும். தேவையான காற் றும் அவசியம். இத்தனையும் இரு ந்தால் மட்டுமே விதை முளைக் கும்.

ஆக, விதைக்குள் முளைக் கும் ஆற்றல் படைத்த கரு இரு ந்தாலும் அது முளைப்பதற்கு சில பல சூழ் நிலைகள் தேவை ப்படுகிறது. அதைப் போலவே ஒரு மாணவனிடம் உள்ள திறமை வெளிப்பட வேண்டுமா னால்அது வெளிப்பட்டு வளர்ச்சி பெறுவதற்கு சில பல சூழ் நிலை கள் தேவைப்படுகிறது. அந்தச் சூழ் நிலைகளை மற்றவர் ஏற்ப டுத்திக் கொடுக்காத நிலையிலும் ஒரு மாணவன் தானே ஏற்படு த்திக் கொண்டு தனது திறமை களை வெளிப்படுத்திக் கொள்வ தும் சாத்தியமே.

மாணவர்களே! ஏதோ ஒரு காட்சியைப் பார்த்த உடன் அதை ஓவியமாகத் தீட்ட வேண் டும் என்று உங்களுக்குத் தோன் றலாம். நீங்கள் பார்த்து ரசித் ததை ஏட்டில் படமாக்க வேண் டும் என்று உங்களுக்குத் தோன்றி விட்டால் ஓவியம் வரைவதற் கான இயற்கை உந்துதல் உங்க ளிடம் இருக்கிறது என்று பொருள். அப்படி ஒரு உணர்ச்சி தோன்றினால் எக்காரணம் கொண்டும் அதை அலட்சியப்ப டுத்தாதீர்கள். உடனே ஒரு காகிதத்யைும் எழுது கோலையும் எடுத்துக் கொண்டு அதில் ஈடுப டுங்கள். உங்களுடைய இயற்கை யான திறமை வெளிப்படுகின்ற ஆரம்பம் அது தான்.

உங்களுக்கு ஒரு சம்பவத் தைப் பார்த்த உடன் அதை எழுத்தில் வடிக்க வேண்டுமென்று தோன்றுகிறதா? ஒரு எழுத்தா ளர் ஆவதற்குரிய சக்தி உங்களி டம் முளைவிடத் தொடங்கி விட்டது என்று அர்த்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே எழுதிப் பாருங்கள். எதிர் பார்த்த வடிவம் அதற்குக் கிடைக்காமல் போகலாம். அதற்காக சோர்வடையாதீர்கள். விதை உடனே செடியாகி விடுவதில்லை. சூழ் நிலைகள் அமைய வேண்டும். அது முளைவிட்டு வளர வேண்டும், நீர், வெளிச்சம், காற்று ஆகியவை போதுமான அளவில் கிடைக்கும் போது அது முழுச் செடியாக வளர்ந்து பூ பூத்து காயாகி கனியும் கொடுக்கும் நிலையை அடைந்து விடும்.

ஒரு கருவியைப் பார்த்தவுடன் அது வேலை செய்வதை நீங்கள் மெய் மறந்து பார்த்துக் கொண்டு இருக்கிறீர்களா? ஒரு இயல் அறிவு உங்களிடம் முளை விடத் தொடங்கி விட்டது என்று பொருள். அதை வளர்த்துக் கொள்ளுங்கள். ஒரு காலத்தில் நீங்கள் ஒரு இயல் நிபுணராகவோ, கண்டு பிடிப்பாளராகவோ நிச்சயமாக ஆகிவிடுவீர்கள்.

இப்படித்தான் ஏதோ ஒரு துறையில் உங்களுடைய திறமை மாணவப் பருவத்திலேயே தலை தூக்கவே செய்யும். எக்காரணம் கொண்டும் நீங்கள் அதை அலட்சியப்படுத்திவிடக் கூடாது. சிறு வயதில் தங்கள் திறமைகளை அடையாளம் கண்டு செயல்பட்டவர்களே வாழ்க்கையில் பெரிய வெற்றிகளைக் குவித்து இருக்கிறார்கள்.

அதனால் தான் மாணவப் பருவத்தில் நேரத்தை விரயமாக்காமல் இருக்கின்ற திறமையை வளர்த்துக் கொள்ள மாணவர்கள் முயற்சிப்பது அவசியமாகிறது. நீங்கள் வளர்த்துக் கொள்ளும் திறமையும் ஒரு போதும் வீணாகாது, அதற்குரிய பலன் கிடைக்க ஒரு வேளை காலதாமதம் ஆகலாம், விதை செடியாகி பலன் தர, எவ்வாறு காலதாமதம் ஆகிறதோ அதைப் போல!

தங்கள் திறமைகளை அடையாளம் கண்டு கொள்ள தவறி விடுவதாலேயே மாணவர்கள் வீண் பொழுது போக்குகின்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள். தங்கள் திறமை பற்றி இவர்களுக்கு நம்பிக்கை இல்லாத காரணத்தால் எதிர் காலத்திலும் நம்பிக்கை இழந்தவர்களாக தாழ்வு மனப்பான்மையுடனும் தோல்வி மனப்பான்மையுடனும் இவர்கள் பொழுதை போககுகிறார்கள்.

மாணவர்கள் ஒன்றை மறந்து விடக் கூடாது. நமக்கென்று எந்தத் தகுதியும் இல்லை, எந்தத் திறமையும் இல்லை என்று எண்ணிக் கொள்ளுகின்ற மனோபாவத்தை முதலில் கைவிட வேண்டும். திறமை என்பது எவருடைய தனிச் சொத்தும் அல்ல. பள்ளித் தேர்வில் தோல்வி அடைந்து விடுகின்ற பல மாணவர்களும் தாங்கள் வாழ்க்கைக்கு லாயக்கில்லாதவர்கள் என்கிற முடிவுக்கு தாங்களாகவே வந்து விடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்வு முடிவுகள் ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் எதிர்காலம் பற்றிய முடிவாக ஒரு போதும் ஆக முடியாது. தேர்வில் முதலிடம் பெற்ற மனிதர்கள் தான் வாழ்க்கையில் சாதனை புரியும் தகுதி படைத்தவர்கள் என்கிற கருத்தும் தவறானது.

கணித மேதை ராமானுஜம் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தோற்றுப் போனவர். பரீட்சை முடிவுகளை வைத்தும் பார்த்தால் ராமானுஜத்தை மேதையாகவோ, வெற்றி பெற்ற மனிதராகவோ கருத முடியாது. நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதைப் போல மழைக்குக் கூட பள்ளிக் கூடத்தில் ஒதுங்காதவர்கள் மகத்தான சாதனை புரிந்து மனிதர்களாக வரலாற்றில் காட்சி அளித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

பள்ளிப் பரீட்சைகளில் வெற்றி பெறுவது. அவசியம் என்றாலும், அதில் ஏற்படும் தோல்விகள் ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் இறுதி அத்தியாயத்தை எழுதும் சக்தி படைத்தவை அல்ல. அதற்காக யாரும் தங்களுடைய தன்னம்பிக்கையை இழக்க வேண்டிய அவசியம் இல்லை. படிக்கின்ற காலத்திலேயே தங்களின் திறமையை உணர்ந்து அதை வளர்த்துக் கொண்டு இருந்தால் பரீட்சைத் தோல்விகள் ஒரு மனிதனுடைய வாழ்க்கையை எந்த விதத்திலும் பாதிக்க முடியாது.

ஆகவே மாணவர்கள் இந்த அடிப்படை உண்மையை கவனித்துக் கொண்டு படிக்கின்ற காலத்திலேயே தங்களின் தனித்திறமையை வளர்த்து கொள்ளுவதில் ஈடுபாடு காட்டினால் தங்கள் எதிர்காலம் பற்றி நம்பிக்கை இழக்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஒரு போதும் வராது.

பாடங்களைப் படித்து அதில் அதிகம் மதிப்பெண் பெறுவது அவசியம் தான். அதே சமயம் உங்களின் விசேஷ திறமையினை வளர்க்க அக்கறை காட்டுவதும் அவசியம்.

எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவு ஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் - கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புதிய - புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும்; இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்
வே.பிரபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்று பாருங்கள்

01. ஒரு தவளை ஒரு அடி உயரம் பாயும் போது அரை அடி சறுக்குகின்றது. 10 அடி ஆழமுள்ள கிணற்றில் இருக்கும் இத்தவளை வெளியே வர வேண்டுமேயானால் எத்தனை தடவை பாய வேண்டும்?


02. 07 வெற்றுச் சோடாப் போத்தல்களை கொடுத்து ஒரு சோடாவை இலவசமாகப் பெறமுடியும். 49 வெற்றுச் சோடாப் போத்தல் வைத்திருப்பவர் எத்தனை சோடாக்களை இலவசமாக அருந்த முடியும்?

03. 09 ஒரே வடிவான தோடம்பழங்கள் உள்ளன. இவற்றில் 8 தோடம்பழம் ஒரே அளவு நிறையுள்ளவை. ஒன்றுமட்டும் சற்று நிறை கூடியது. சம நிலைத்தராசு (கடைத்தராசு) ஒன்றைப் பயன்படுத்தி 02 தடவைகள் மட்டும் நிறுப்பதன் மூலம் நிறை கூடிய தோடம்பழத்தை எவ்வாறு கண்டுபிடிப்பீர்கள்?

04. 999
888
777
―――
999

இவ் இலக்கங்கங்களைக் கூட்டுவதன் மூலம் கீழேயுள்ள 999 எனும் இலக்கத்தை பெறுக?

05.




கணக்குப் புதிர்

மாணவர்களே! உங்களின் அறிவுத்திறனை மேலும் விருத்தி செய்யும் நோக்கில் இவ்விதழிலில் இருந்து நாம் கணக்குப் புதிரினை வழங்குகிறோம். மேலே தரப்பட்டுள்ள புதிர்களுக்கான விடைகளை எழுதி பெயர், முகவரி' பாடசாலையின் பெயரைக் குறிப்பிட்டு, 31.09.1997 க்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடை தருவோரில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் மூவருக்குப் பணப் பரிசுகள் எம்மால் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகை மருந்தும் முறையான வாழ்வும்

தொன்மையான மருத்துவமாக மக்கள் வழக்கிருக்கும் தமிழ் சித்தர், மூலிகை, ஆயுர்வேதம் மற்றும் இஸ்லாமியர் வழக்கான யுனானி - மருத்துவ முறைகள், குறிப்பாக இந்தியாவிலும், சிறிலங்காவிலும், தமிழீழத்திலும், வளரவல்ல வளர் பயிர் வகைளில் பெரும்பாலாகத் தங்கியுள்ளது.

தமது உடலை வலுவாக வைத்திருக்க எண்ணுவோர், நோயினால் நலிவுற்றோர், வேறு தேவையுடையவர் எனப்பலரும் உட்கொள்ளும் உணவுகளில் மருத்துவ மூலிகைகள் பயன்பட்டு வருகின்றன. அதன் அளவு, குணம் இவைகளை அறிந்து உணவோடு சேர்த்துக் கொண்டால் நோய்கள் நீங்கும், நலமுள்ள வாழ்வு மிகும்.

விபத்துக்களால் ஏற்படும் நோவுகளுக்கும் விஷசெந்துகளால் வரும் பாதிப்புகளுக்கும் மூலிகைகள் பயனளிக்கும். எனவே நம் நிலத்திடை வளரக் கூடிய மூலிகைகள் பற்றியும் மருந்துக் குணமுள்ள உணவுகள் பற்றியும் அறிதல் பயனுடையது.

பல நோய்களுக்கு மருந்தான தூதுளை.

தூதுவளை, தூதுளை என்று வழங்கும், கொடியினத்தைச் சேர்ந்த இச்செடி நீருள்ள இடமெங்கும் வளரும். காய்கள் பச்சை நிறமும், பழங்கள் சிவப்பாயும், உருண்டை வடிவிலும் அமைந்துள்ள இச்செடியின் பூக்கள் ''வயலெற்'' நிறத்தில் இருக்கும். இப்பூவை பசுப்பாலில் அவித்து சீனி சிறிதளவு சேர்த்துச் சாப்பிடும் போது வாத உளைவு, கடுப்புக் குறையும், ஆரம்பவாத உடல் உளைவிற்கு இது ஏற்றது.

தூதுளை இலையை அரைத் துண்பதும், கூட்டுப்பச்சடி, துவையல், வெண்மைக்கறி என, விதம் விதமாக உணவு செய்வது வழக்கம். கிழமையில் நான்கு வேளை பகலுணவோடு உண்பதால் நெஞ்சுச்சளி, நீர்க்கோவை ஆகிய நோய்கள் தடைப்படும், வயிற்றுப் பொருமல், புளியேப்பம் நீங்கும்.

தூதுளை வேர், இலை, செடி கொடி, காய் யாவுமே நாட்டு மருத்துவத்தில் பயன்படுவதால், தூதுபத்திரி நூறுநோயறுக்கும் என்று கூறுவார்கள். ஆயுர்வேதம் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான மருந்தில் இதையும் ஒரு மூலிகையாக அறிமுகம் செய்கிறது. நூறுகிராம் அளவுள்ள பாதி உலர்ந்த தூதுளை இலை, கொடி, காய் ஆகியவற்றை இரு தம்ளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரில் அவித்து, பத்து கிராம் திப்பிலியை (ஒரு தம்ளர் நீர் அரைத் தம்ளர் ஆகும் போது) தூளாக்கிக் கரைத்துக் குடிக்க நீண்ட நாள் இருமல் மட்டுப்படும்.

தூதுளையை உண்ணும் நாளில் உழுந்தின் உபயோகம் தேவை.

''செய்ய உழுந்திற்கு சிலேத்தும அலம்பிறக்கும்.
வெய்ய பித்தம் போம் மந்தம் வீறும் காண்-மெய்யதனில்
என்புருக்கி தீரும் இடுப்புக்கதி பலமாம்.
முன்பு விருத்தியுண்டாம் உண்'' என்பது யதார்த்த குண விளக்கப் பாடல். இடுப்பிற்கு உறுதியும் உடற்பலமும் தரும் உணவு உழுந்து என்பதை இதனால் அறியலாம்.

உழுந்தைப் பருப்பாக்கி மாவான பின்பு இரும்புப் பாத்திரத்தில் சூடாக்கிய நல்லெண்ணையில், (1 போத்தலுக்கு ஒன்றரைக் கிலோமாவு) விட்டுக் கிளறி சற்கரையும் கூட்டி காலையில் சாப்பிடவும். சீரணிக்கும் நிலை கருதி மாவை கூட்டிக் குறைக்கவும். மாலையில் சாப்பிட்டால் மலச்சிக்கல் உருவாகும்.

இவற்றை எண்ணிப்பார்க்கையில் வீட்டுத் தோட்டத்தில் வளரக் கூடிய விளைபயிர்கள் உடலின் உறுதி போற்றும் மூலிகைகளில் பல, என்பது விளங்கும். நோயை எதிர்க்கும் உடலையும், பகையை முடிக்கும் வலுவையும் தரும் மூலிகை உணவுகளை தரும் மருந்தாக்கிக் கொள்வோம்.

–திருமலை யோகேந்திரம்

---

## ஏன் பூக்கிண்ணம் இல்லை?

**பெர்** னார்டுஷாவின் வீட்டிற்கு நண்பர் ஒருவர் வந்தார். ஷாவின் வீட்டில அலங்காரத்திற்காகப் பூ வைக்கின்ற பூக்கிண்ணங்கள் எங்குமே இல்லாததைக் கண்டார்.

உடனே அவர் ஷாவைப் பார்த்து ''உங்களுக்குப் பூக்கள் என்றால் மிகவும் பிடிக்கும் என்று சொன்னார்கள். ஆனால் உங்கள் வீட்டில பூக்கிண்ணங்களையே பார்க்க முடியவில்லையே?'' என்று கேட்டார்.

அதற்கு ஷா ''எனக்குக் குழந்தைகள் என்றாலும் உயிர்தான் அதற்காக அவர்களின தலைகளை வெட்டி இங்கு அழகிற்காக வைக்க முடியுமா?'' என்று கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல்

## வினாக்கள்

01. மன்னாருக்குத் தென் புறத்தே உள்ள வன சரணாலயம் எது?

02. பங்களாதேச சக்மா இன மக்களின் விடுதலை அமைப்பின் பெயர் என்ன?

03. வவுனியா மாவட்டத்தில் 1956 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பாரிய குடியேற்றத்திட்டம் எது?

04. அணுகுண்டு தயாரிப்பிற்குப்பயன்படும் மூலகம் யுரேனியம் தமிழீழத்தில் எந்த மாவட்டத்தில் உள்ளது?

05. யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் ஒரே ஒரு ஆறு எது?

06. ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருடகால ஆட்சியின் பின் புதிதாக ஆட்சிப்பீடமேறிய சந்திரிகா அரசு தேர்தலுக்கு மூந்திய தனது வாக்குறுதிகளில் நிறைவேற்று அதிகார ஆட்சி முறையை ஒழிப்பேன் என்று அறைகூவல் விடுத்தார். இந்த நிறைவேற்று அதிகார முறையை கொண்டுவந்த சிங்கள மூத்த இனத் துவேசி யார்?

07. ஒரு தேசிய இனத்திற்கு இருக்க வேண்டிய பண்புகளில் மொழியும் ஒன்றாகும். எமது மொழியை அழிக்க வேண்டுமென்பதற்காக திட்டமிட்ட ரீதியில் 1956 இல் தனிச் சிங்களச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இதனைக் கொண்டு வந்தவர் யார்?

08. ருவாண்டாவின் விடுதலைப் போராட்டத்தில் துட்சி இனத்தின் ஆட்சி உரிமையைப் பெற்றுக்கொடுத்தவரும் அகதி முகாமிலேயே பிறந்து வளர்ந்தவருமாகிய ருவாண்டாவின் விடுதலைப் போராட்டத் தலைவர் யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பாட்டாளி மக்கள் தாம் அடைக்கப்பட்டிருந்த சிறையை 1789ம் ஆண்டு பிரான்சில் உடைத்து வந்த போது முதன் முதலில் உலகில் உழைக்கும் மக்களின் புரட்சி ஆரம்பமானது. இதன் போது தான் ஐரோப்பாவிலும் கைத்தொழில் புரட்சி ஆரம்பமானது. இந்த அடிமைகளாக இருந்த மக்கள் 1789ம் ஆண்டு உடைத்து வந்த சிறையின் பெயர் என்ன?

10. மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்கும் இடையே உள்ள ஆறு எது?

11. யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலை எழுதியவர் யார்?

12 ''நான் மாண்ட பிறகு எனது கல்லறையில் தமிழ் மாணவன் ஒருவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்.'' என்று பொறிக்க வேண்டுமெனக் கூறியவர் யார்?

13. சிறீலங்கா சுதந்திர தினத்தன்று திருமலையில் சிங்கக் கொடியை அகற்றி கறுப்புக் கொடி கட்ட முயன்ற போது சிங்களக் காடையரால் சுடப்பட்ட தியாகி யார்?

14. பள்ளி மாணவர்களுக்கு இரு கைகளாலும் எழுதப் பழக்கும் நாடு எது?

15. வரப்போகிற 2000 ஆண்டில் பெப்ரவரி மாதத்தில் எத்தனை நாட்கள் வரும்?

16. திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?

17. நம் உடலில் இரத்தம் பாயாத பகுதியும் இருக்கிறது. அப்பகுதி எது?

18. 'சிலிக்கா' மணல் தமிழீழத்தில் எப்பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுகிறது.

19. தீவாகவும், கண்டமாகவும், ஒரு நாடாகவும் விளங்கும் நிலப் பரப்பு எது?

20. புல் வகைகளில் மிக உயரமாக வளரக் கூடியது எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

01. வில்பத்து

02. சாந்திபாகினி

03 .பாவற்குளம் குடியேற்றத்திட்டம்

04. அம்பாறை அறுகம் குடாவில்

05. வழுக்கியாறு

06. ஜே. ஆர். ஜெயவர்த்தனா

07. S.W.R D. பண்டாரநாயக்கா

08. போல்ககாமே

09. பஸ்டில் சிறை

10. வெருகல் ஆறு

11. மயில்வாகனப்புலவர்

12. திருமலை நடராஜன்

13. ஐரோப்பியர் ஜி. யூ. போப்

14. யப்பான்

15. 30 நாட்கள்

16. 42, 194

17. விழிவெண்படலம்

18. நாகர் கோவில்

19. அவுஸ்திரேலியா

20. மூங்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் எண்ணங்களை உணரும் தாவரம்

அமெரிக்காவில் ஒரு அதிசய மனிதர், அவருடைய பெயர் கிளிபாக்ஸ்டர். அவர் தாவரங்களின் நுண்ணறிவின் துணையைக் கொண்டு பொய்களைக் கண்டு பிடித்து வந்தார். அவர் தற்செயலாக தாவரங்களின் மர்மங்களை அறிந்து கொள்ள நேரிட்டது. ஒரு சமயம் அவர் காவல்துறையினருக்கும் பாதுகாப்புப் பணிபுரிகிறவர்களுக்கும் பொய்களைக் கண்டு பிடிக்கும் நுட்பங்களைப் பற்றிக் கற்றுக் கொடுத்து வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். அப்போது ஒரு விந்தை நிகழ்ச்சியை கண்டார்.

பொய்களைக் கண்டுபிடிப்பதற்கு உதவும் "போலிகிராப்" (Polygraph) என்னும் கருவி இணைக்கப்பட்டுள்ள தாவரத்தைப் பற்றி பாக்ஸ்டர் எண்ணிய போதெல்லாம் அந்தக் கருவியில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. அவருடைய எண்ணங்களைத் தாவரம் பெற்றுக் கொண்டு தனது உணர்ச்சிகளைக் கருவிக்கு அனுப்பியிருக்கிறது. அவருடைய எண்ணங்களைத் தாவரம் நன்கு புரிந்து கொண்டு சரியான முறையில் விளக்கமும் தர ஆரம்பித்தது. தாவரத்தின் உணர்ச்சியை அறிவதற்குப் பாக்ஸ்டர் மற்றோர் சோதனையை நடத்தினார். அந்தத் தாவரத்தைக் கொழுத்தி அழித்து விடலாம் என்று அவர் நினைத்த போதெல்லாம் கருவியில் உள்ள ஊசி நடுங்கிக் குதிக்க ஆரம்பித்தது. தாவரம் தனது பயத்தைத் தெரிவிப்பது போலத் தெரியும் அதன் உணர்ச்சியை கருவியின் ஊசியிலே காண முடிந்தது. அதே சமயத்தில் மற்றோர் சோதனையை பாக்ஸ்டர் நடத்தினார். தாவரத்தைக் கொளுத்தி விடப் போவது போலப் பாசாங்கு செய்தார். அப்போது தாவரத்தை நோக்கினார். அது அமைதியாக இருந்தது. பாக்ஸ்டர் பாசாங்கு தான் செய்கிறார் என்பதை உணர்ந்து கொண்டதைப் போல அது நடந்து கொண்டது. கருவியின் ஊசியை அது நடுங்க வைக்கவில்லை. எனவே உண்மையான எண்ணங்களையும் பொய்யான எண்ணங்களையும் கண்டு பிடிக்கும் திறன் தாவரத்திடம் அமைந்திருந்ததை பாக்ஸ்டர் கண்டு பிடிக்க முடிந்தது.

தாவரத்திற்குக் கண் இல்லை, மூக்கு இல்லை, வாய் இல்லை. எனினும் அவற்றின் அறிவுத் திறன் அதிசயிக்கத் தக்கது. அது கண் இல்லாமலே மனிதரைப் பார்க்கிலும் கூர்மையான பார்வையைப் பெற்றுள்ளது. மனிதனின் உள்ளத்தையும் எண்ணங்

களையும் அறிவதற்குத் தாவரத்திற்கு ''எக்ஸ்ரே கண்கள்'' இருக்க வேண்டுமென்று அவர் தீர்மானித்தார்.

நியூ ஜேர்மனியை சேர்ந்த பியர்பால் சாலின் என்பவர் எலக்ரோனிக் நுட்பங்களைப் பயின்று நன்கு தேர்ச்சி பெற்றவர். பாக்ஸ்டர் தாவரத்தைப் பற்றிக் கண்டு பிடித்திருந்த உண்மைகளை அவர் கேட்டறிந்தார். தாவரங்கள் மனிதனின் எண்ணங்களைத் தெரிந்து கொள்வது மட்டுமல்ல நல்லது எது? கெட்டது எது? என்பதையும் நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்பதையும் தாவரம் உயித்துணர முடியும் என்பதை அவர் கண்டு கொண்டார். அவர் தனது கண்டு பிடிப்பை மெய்ப்பிக்கவும் செய்தார். அவர் பாக்ஸ்டரின் கண்டு பிடிப்புக்கு ஒரு அடி அதிகமாக முன்னேறிவிட்டார்.

பியர்பால் தனது கண்டு பிடிப்பை மெய்ப்பிப்பதற்காக ஒரு நண்பரை அழைத்து வந்து ஓர் தாவரத்தை கொடுமைப்படுத்தச் சொன்னார். அந்த நண்பர் தாவரத்தின் இலைகளைக் கொளுத்தினார். அதன் தண்டை வெட்டினார். பிறகு அவர் தாவரத்தை வேருடன் பிடுங்கினார். மற்றோர் நண்பரை அதே தாவரத்திடம் அன்பு காட்டச் சொன்னார். அந்த நண்பர் மீண்டும் மண்ணில் நட்டுத் தண்ணீர், உரம் ஆகியவற்றை அன்புடன் ஊட்டிப் பேணினார். சில நாட்களுக்குப் பிறகு அந்த இரு நண்பர்களையும் மேற்கூறிய தாவரத்தை அணுகி நோக்குமாறு பியர்பால் கேட்டுக் கொண்டார். நண்பர்கள் அவ்வாறே செய்தனர்.

கொடுமைப் படுத்திய நண்பர் அணுகியதும் அந்தத் தாவரம் மெய்சிலிர்த்தது, நடுங்கியது, அது நினைவிழந்த நிலைக்கு வந்து விட்டது. தனக்கு இழைக்கப் பட்ட கொடுமைகளை அது மறக்க வில்லை. அடுத்த படியாக தாவரத்தைப் பேணி பாதுகாத்த நண்பர் அணுகினார். என்ன ஆச்சரியம் தாவரத்திற்கு மலர்ச்சி ஏற்பட்டது. வரம்பு மீறிய மகிழ்ச்சி! நாம் கேட்கக் கூடிய மனிதனின் குரலும் செயலும் அதற்கு இருந்திருந்தால் அது ஆரவாரம் செய்திருக்கும். இனிமையாக நடனம் புரிந்திருக்கும். ஆனால் அது தனக்கே உரிய பரிபாஷையில் சாதாரணமாகச் சொற்களுக்கு இல்லாத அதிசயத்துடன் அது தனது உணர்ச்சிகளைத் தெரிவித்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெம்பு பணிமனை,
முல்லை வீதி,
புதுக்குடியிருப்பு.

என் அன்புள்ள சகோதரர்களே!

நான் நலமே, நீங்கள் எப்படி நலமா? என்னை உங்கள் அனைவருக்கும் தெரியாதென்றுதான் நினைக்கிறேன். தெரிந்திருக்க நியாயமில்லைத்தான். இருந்தாலும் இன்றிலிருந்து நாமனைவரும் அறிமுகமாகிக் கொளவோம். உங்களோடு சேர்ந்து உங்களுடைய பிரச்சினைகளில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற அவா எனக்கு நெடுங்காலமாக இருந்தது. ஆயினும், சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இவ் இதழின் மூலம் அது நிறைவேறும் என நினைக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களுக்கு?!

எங்கள் எல்லோரிடமும் ஒரு குறைபாடு இருக்கிறது ஏன் மனிதர்கள் எல்லோரிடமும் தான் இருக்கிறது. அது எங்களுடைய வாழ்க்கையை பிரச்சனையாக்கி விடுகிறது. அதற்கு வேறு யாரும் காரணமல்ல. நாங்கள் தான் எங்கள் மனந்தான் காரணம். அது எங்களை மகிழ்ச்சியாக இருக்க விடுவதில்லை. அது என்ன வென்றால், ''சோகங்களையே சுமந்து கொண்டு திரிவது'' நேற்று நடந்த சோகமான சம்பவங்களையும் நாளை அது நடக்குமோ? நடக்காது விடுமோ? அப்படி இல்லாவிட்டால்? ..........இப்படி எங்களது கற்பனையிலேயே நாளை நடக்கப் போவதை சோகமாக உருவாக்கி அதையும் சேர்த்து இன்றே நினைத்து மனதைச் சுமையாக்கிக் கொள்வது. அதனால் இன்று ஒன்றும் நடக்காமலே சோகமான முகத்தோடும் செழிப்பற்ற தன்மையோடும் எதையோ பறிகொடுத்தவர் போல் திரியநேரிடுகிறது. இப்படியான அனுபவங்கள் உங்களுக்கும் ஏற்பட்டிருக்கலாம்.

கடந்த துயரச் சம்பவங்களை நினைத்து இன்று நாம் கவலைப்படுவதால் அவை சந்தோசமாக அமையப் போவதில்லை. இதையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்கள் "போன பஸ்ஸிற்கு கைகாட்டிப் பிரயோசனமில்லை" என்று அனுபவப்பட்டதைச் சொல்வார்கள். இதைவிட்டு நேற்று நடந்த சந்தோஷமான விசயத்தை நினைத்தால் ...!! இதேபோல் நாளை நடக்கப் போகின்ற சம்பவங்களை சந்தோஷமானவையாக நினைத்தால்......!! இன்றையநாள் எவ்வளவு மகிழ்ச்சியானதாக அமையும். அந்த மகிழ்ச்சியில் எவ்வளவு உற்சாகமாக இருக்கமுடியும். அந்த உற்சாகமும் மகிழ்ச்சியும் இன்றைய நாளை வெற்றிகரமான தாக்காதா என்ன? "மனிதன் எதுவாக எண்ணுகிறானோ அவன் அதுவாகவே ஆகிறான்" இதுவே உளவியலாளர்களும் ஆத்மீகவாதிகளும் சொல்லும் உண்மை. அப்போ மகிழ்ச்சியான வெற்றிகரமான எண்ணங்களோடு நீங்கள் வாழ்க்கையை வெல்ல ஆயத்தமாகிவிட்டீர்களா?!

அடுத்த இதழில் சந்திக்கும் வரை

உங்கள்
இனியவள் அக்கா.

என்னுடன் தொடர்பு கொள்வதானால்
நெம்பு பணிமனை
முல்லை வீதி,
புதுக்குடியிருப்பு.

அச்சமைப்பு: மாலதி பதிப்பகம் ஓவியம்: தயா
அட்டைப் பதிப்பு: அந்திவானம்
உருவாக்கம்: ஆசிரியர் குழு
தொடர்பு: **நெம்பு பணிமனை**
முல்லை வீதி, புதுக்குடியிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ உங்கள் அச்சிடும் தேவை எதுவானாலும்

❋ நீங்கள் நாடவேண்டிய இடம்

வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ. து)

**பதிப்பகம்**

துணுக்காய் சாலை,
மல்லாவி.

தண்ணீரூற்று,
புள்ளியவளை.

பரந்தன் வீதி,
புதுக்குடியிருப்பு.

---

கண்ணுக்கு (கரு)மை அழகு
மண்ணுக்கு பசுமை அழகு
வண்ணம் மின்னிடும் பொன் நகைகளுக்கு

**"சுமங்கலி"** அழகு

உங்கள் தங்க நகைகளின் தேவைக்கு தேடவேண்டிய இடம்

சுமங்கலி நகைமாடம்

பிரதான வீதி, ஸ்கந்தபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐடியல் கல்வி நிலையம்

யோகபுரம்,
மல்லாவி.

பாலிநகர்,
வவுனிக்குளம்.

ஆண்டு 1 முதல் A/L வரை

ஆண்டு 6 - 11,

OL DAY

கணிதம் :- திரு .V .M . பத்மநாதன்

விஞ்ஞானம் :- திரு .J. J கொலின்ஸ்
திரு .S. அருள்நேசன்

தமிழ்:- திரு .N. கணேசமூர்த்தி

ச.கல்வி :- திரு .S. ஈசன்

ஆங்கிலம் :- திரு .S. தவராசா

வர்த்தகம ;- திரு R புவன்ராஜ்

சமயம் ;- திரு .J. ஸ்ரீ

A/L வகுப்புக்கள்

இந்துநாகரீகம் ;-
இந்துசமயம :-
திரு .T. ஸ்ரீஸ்

கணக்கியல் ;-
திரு .R. புவன்ராஜ்

தமிழ் :-
செல்வி கௌரிபுத்திரி

புவியியல் :-
திரு . சிறிரங்கநாதன்

வாகனம் மற்றும் இலத்திரனியற் பொருட்களின்
பாவனையாளரின் நம்பிக்கையைப் பெற்ற இடம்

# இரத்தினம்

மீள முறுக்குனரும் உதிரிப்பாக விற்பனையாளரும்

- சகலவிதமான வைன்டிங் வேலைகளையும்
- வாகன உதிரிப்பாகங்களையும்
- றேடியோ, T.V க்குத் தேவையான I.C மற்றும் உதிரிப்பாகங்களையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றிட

# இரத்தினம்

துணுக்காய்சாலை,
மல்லாவி.

முல்லை ரோடு,
புதுக்குடியிருப்பு.